இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/=

மாதமிரு இதழ் — 457 ● 1995 பெப்ரவரி 17 வெள்ளிக்கிழமை

நிச்சயம் வாசிக்க வேண்டிய
மார்க்சிச போராட்ட
வரலாற்று நூல்
சமசமாஜ வரலாற்று
ஏட்டிலிருந்து
— கீர்த்தி பாலசூரிய —
விலை : 25.00
90 1 வது, மாளிகாகந்த ஒழுங்கை
கொழும்பு — 10.

University of Jaffna Sri Lanka
RECEIVED
1995-4-6
Periodicals Division
Library

### "வொயிஸ் ஒப் அமெரிக்கா", இந்திய—அமெரிக்க உடன்படிக்கை:

# இந்திய துணைக் கண்டத்தில் அமெரிக்கா யுத்த நடவடிக்கைகளை பலப்படுத்துகிறது

ஜனவரியின் கடைசி இரு வாரங்களில் இலங்கை பொதுஜன முன்னணி அரசாங்கமும் இந்திய நரசிம்மராவ் அரசாங்கமும் பொதுவில் உலகத் தொழிலாளர் வர்க்கம் சம்பந்தமாயும் சிறப்பாக இந்தியத் துணைக் கண்ட தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் தொடர்பானதுமான இரண்டு எதிர்ப்புரட்சி உடன்படிக்கைகளில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் கைச்சாத்திட்டுள்ளது.

★ அமெரிக்க யுத்த தொடர்பு ஒலிபரப்பு நிலையமாகப் பயன் படுத்தும் சாத்தியங்களைக் கொண்ட இரணவில 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' ஒலிபரப்பு நிலைய வேலைகளை திரும்பவும் ஆரம்பிக்க பொது ஜன முன்னணி அரசாங்கம் கிளின்டன் அரசாங்கத்துக்கு அனுமதி வழங்கியதாக ஜனவரி 24ம் திகதி அறிவித்தது.

★ அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இந்திய நரசிம்மராவ் அரசாங்கத்துடன் இருதரப்பு யுத்த நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கும் "பாதுகாப்பு ஒப்பந்தத்தில்" கைச்சாத்திட்டனர்.

இலங்கை முதலாளி வர்க்கமும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் ஏகாதிபத்திய வாதிகளின் அபிலாசைகளை நிறைவேற்றி வைக்க எடுத்துள்ள இந்த நடவடிக்கைகளை பூசி மெழுகும் பொருட்டு வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஒரு அறிக்கையை வெளியிட்டார். "அனைத்துலகச் சட்டத்தின் கீழ் ஒரு தரப்பினர் இரத்துச் செய்துவிட முடியாத அனைத்துலக உடன்படிக்கை இருந்த ஒரு நிலைமைக்கு நாம் முகம் கொடுத்தோம்."

முன்னைய யூ.என்.பி அரசாங்கம் இந்த இரணவில ஒலிபரப்பு நிலையம் தொடர்பாக அமெரிக்காவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையைப் பகிரங்கப்படுத்தாதது ஒரு தவறாகும் எனக் கூறிவந்த இந்த வெளிநாட்டமைச்சர் இப்போது கூறுவது என்ன தெரியுமா? பாரம்பரிய மீன்பிடி நடவடிக்கைகளுக்கும் சமய வழிபாடுகளுக்கும் இடம் கிடைப்பதாயும் 'வொயிஸ் ஒப் அமெரிக்கா'வுக்காக 400 ஏக்கர்களே ஒதுக்கப்படுவதாயும் கூறி பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் நிச நிர்வாணக் கோலத்தை மூடி மறைக்க முயன்றுள்ளார்.

பொதுத் தேர்தல் காலத்தில் பொது மக்களின் கண்களில் மண்வீசும் பொருட்டு யூ.என்.பி அரசாங்கம் உருவாக்கிய 'வொயிஸ் ஒப் அமெரிக்க உடன்படிக்கை'யை பொதுஜன முன்னணி ஆட்சிக்கு வந்த ஒரு வாரத்தினுள் கிழித்து எறிவதாகக் குறிப்பிடும் வாய்வீச்சுக்களில் இன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஈடுபட்டு வந்தார். பொதுஜன முன்னணி ஆட்சிக்கு வந்தவுடன் அந்த வாக்குறுதியில் நம்பிக்கை வைத்த இரணவில வாசிகள் வொயிஸ் ஒப் அமெரிக்காவை இரத்துச் செய்யக் கோரும் பிரச்சாரத்தில் புதிய மட்டத்தில் இறங்கினர். அரசாங்கத்தின் பதில் என்ன? நிராயுதபாணிகளான ஒடுக்கப்படும் மக்கள் மீது கொடிய பொலிஸ் தாக்குதலை கட்டவிழ்த்து விட்டதோடு ஒரு மீனவ இளைஞரைச் சுட்டுக் கொன்றது.

அக்டோபர் 4ம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் கிராமவாசிகளின் எதிர்ப்பினை நசுக்கித் தள்ளி இந்த யுத்த ஒலிபரப்பு நிலைய வேலைகளை திரும்பவும் ஆரம்பிப்பதற்கான நிலைமைகளை உருவாக்கித் தருவதாக பொதுஜன முன்னணி அரசாங்கம் அமெரிக்க அரசாங்கத்துக்கு செய்த ஒரு சமிக்கையாகும், இன்று இது நிறைவேற்றப்பட்டுள்ளது. எந்தவிதமான ஈடாட்டமும் இல்லாமல் 'வொயிஸ் ஒப் அமெரிக்க' வேலைகளைத் தொடர அரசாங்கம் நிலைமைகளை உருவாக்கித் தர வேண்டும் என அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினை நேரடியாக மிரட்டி வந்தனர்.

இரணவிலவில் நிறுவப்பட்டுவரும் 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' ஒலிபரப்பு நிலையம் அமெரிக்க வானொலியின் பிரச்சார நடவடிக்கைகளுக்கான ஒரு ஒலிபரப்பு நிலையம் என்பது முழுப் பொய்யாகும். இந்த நிலையம் கடலடியின் கீழான நீர்மூழ்கிகளையும் சுற்றிலும் உள்ள யுத்த முகாம்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய நவீன தொழில்நுட்ப, விஞ்ஞான வசதிகளையும் கொண்டதாக விளங்கும் என 1985ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 'கம்கறு மாவத்த' (தொழிலாளர் பாதை) பத்திரிகை முதல்தடவையாக அம்பலப்படுத்தியது. அன்று அமெரிக்காவின் 'பனிப் போருக்கு' முகம் கொடுக்கிருந்த சோவியத் யூனியனின் ஸ்டாலினிச அதிகாரத்துவமும் அதனுடன் பாதுகாப்பு உடன்படிக்கை செய்துகொண்டிருந்த இந்திய முதலாளித்துவ அரசாங்கமும் இலங்கையில் அமைக்கப்படும் இந்த வொயிஸ் ஒப் அமெரிக்க நிலையத்தினை எதிர்த்ததற்கு காரணம் அதுவே. 1987ல் கைச்சாத்திடப்பட்ட இந்திய — இலங்கை உடன்படிக்கையின் சரத்துக்களில் ஒன்று இந்த 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' ஒலிபரப்பு நிலையம் அமைக்கப்படுவதை நிறுத்த வேண்டும் என்பதை உள்ளடக்கிக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(7ம் பக்கம் பார்க்க)

# மார்ச் 19 தொழிலாளர் - ஒடுக்கப்படுவோர் மாநாட்டை கட்டி எழுப்புங்கள்!

இலங்கை பூராவும் பல்வேறு வேலைத்தலங்களிலும், பகுதிகளிலும், தொழிலாளர், விவசாயிகள், மாணவர்கள், இளைஞர்கள் தமது உரிமைகளுக்கான போராட்டங்களிலும் பிரச்சாங்களிலும் ஈடுபட்டுவருகின்றனர். பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளித்துவ தொழிலதிபர்களும் கூடி தொழிலாள — ஒடுக்கப்பட்ட மக்களின் சகல உரிமைகளுக்கும் எதிராக தீவிர தாக்குதலைத் தொடுத்துள்ளனர். தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் புதிய வேலைத் திட்டம், கொண்ட தலைமையை கட்டியெழுப்புவது இன்று ஜீவ மரணப் போராட்டமான பிரச்சனை என்பது இச் சகல இடங்களிலும் நிருபிக்கப்பட்டுவருகின்றது.

அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் 1995 மார்ச் 19ம் திகதி கொழும்பு பொதுசன நூல் நிலையக் கேட்போர் கூடத்தில் தொழிலாளர் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் மகாநாட்டை கூட்ட உள்ளது. இம் மகாநாட்டில் தொழிலாளர் ஒடுக்கப்பட்டோருக்கு இன்றியமையாத புதிய முன்னோக்கையும் தலைமையையும் கட்டியெழுப்புவது சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறும். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இம்மகாநாட்டின் வேலைத்திட்டத்தை தமிழ் மொழியில் ஒரு சிறு கைநூல் வடிவில் வெளியிட்டுள்ளது. அந் நூலை வாசிக்குமாறும் அம் மகாநாட்டிற்கு சமூகமளிக்குமாறும் வர்க்க உணர்வுள்ள தொழிலாளர் ஒடுக்கப்பட்ட இளைஞர்களிடம் நாம் வேண்டுகிறோம்,

### வேலைத் திட்டம்

17 ஆண்டுக் கால மிருகத்தனமான ஏகாதிபத்திய சார்பு யூ.என்.பி அரசாங்கத்தின் ஆட்சிக்கு எதிரான மக்கள் எதிர்ப்பு வளர்ச்சி கண்டு வெடித்த நிலையில் அரசாங்க மாற்றம் இடம் பெற்றது. 'சமாதானம், சுபீட்சம், சனநாயகம்' உருவாக்

(8ம் பக்கம் பார்க்க)

□ முதலாளித்துவ அரசாங்கம், தொழில் அதிபர், தொழிற்சங்க முத்தரப்பு கூட்டினை நிராகரி!
□ அனைத்துலக சோசலிசத்தின் அடிப்படையில் புதிய தலைமையைக் கட்டியெழுப்பு!

தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் பேரொளர் மகாநாடு

1995 மார்ச் 19 காலை 10-மாலை 5 மணி
கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைக் கிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

எண்ணம்

# "சமாதான" முயற்சியும் தொழிலாளர் வர்க்க வேலைத்திட்டமும்

இலங்கை தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்பட்ட மக்களிற்கு தலைமைதாங்கி இலங்கை-ஈழம் சோசலிசக் குடியரசுக்குப் போராட வேண்டிய தேவை மிகத் தீர்க்கமான ஒன்றாக இன்று விளங்குகின்றது.

அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலமும் அதன் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், இந்திய உபகண்ட சோசலிசப் புரட்சியின் ஓரங்கமாக இந்த வேலைத்திட்டத்தை 1987 இந்து-லங்கா உடன்படிக்கை, இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை முன்எடுத்த ஏகாதிபத்திய சார்பு இலங்கை-இந்திய முதலாளித்துவ வர்க்கங்கங்கள் சமர்ப்பித்த எதிர்ப்புரட்சிகர முன்நோக்கிற்கு எதிராகவே இதனைச் சமர்ப்பித்தன. தொழிலாளர் வர்க்க சுயாதீன அரசியல் முற்நோக்கு இதுவே ஆகும்.

இலங்கையிலும் ஈழத்திலும் இந்தியாவிலும் முதலாளிகளதும் முதலாளித்துவ அரசாங்கங்களதும் எதிர்ப்புரட்சிகர முன்நோக்கும் சூழ்ச்சிகளும் மீண்டும் புதுமட்டத்தில் உருவாகியுள்ளன. திரைமறைவில் ஏகாதிபத்தியம் உள்ளது. மறைந்திருந்து கொண்டு அது இந்த எதிர்ப்புரட்சிகர முன்நோக்கையும் சூழ்ச்சியையும் தயாரித்து வருகிறது. சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் 'சமாதான முயற்சி' என்ற போர்வையின் கீழ் இந்த தயாரிப்பு இடம் பெறுகிறது.

"சமாதானத்தை ஏற்படுத்த முடிந்தளவு தூரம் செல்ல தான் விரும்புவதாக" சனாதிபதி கூறியுள்ளார். அமெரிக்க 'டைம்ஸ்', 'நியூஸ்வீக்' சஞ்சிகைகளும் பிரான்சிய 'லாமொன்டே', இந்தியாவின் 'த இந்து', பத்திரிகைகளும் இன்று இந்த 'சமாதான' முயற்சியை பிரபல்யபடுத்திவரும் சர்வதேச ஊதுகுழல்களில் சில ஆகும். "முழுப்பலத்தையும் பாவிக்க" தயார் என்று சந்திரிகா பண்டாரநாயக்கா கூறியுள்ளார். யூ.என்.பி., அரசாங்கத்தின் இந்த 'சமாதான முயற்சிக்கு' தாம் ஆதரவு தெரிவிப்பதாக கூறியுள்ளது.

தனி அரசுக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டு 'சுயாட்சி'யுள்ள வடக்கு-கிழக்கு பிராந்தியத்தை பெறத் தாம் தயாராக உள்ளதாக விடுதலைப் புலிகள் தலைமைகள் தம்பக்கத்திலிருந்து அறிவித்துள்ளனர். 'சமாதானம்', 'சனநாயகம்' என்பதை தற்போது ஏலத்தில் விட்டபடி பொதுஜன முன்னணி அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தமக்குத் தேவையான படி பேரம் பேசுகின்றன. இருபுறத்தில் உள்ளவர்களும் முதலாளித்துவ சார்பானவர்களே. சமாதானம், சனநாயகம் என்ற பேரம் பேசலினூடாக தத்தமக்கு வேண்டிய இலாபம், சலுகைகளைக் பெறும் அடிப்படை வெளிப்படுத்துப்படுகின்றதை காணலாம். அதாவது, முதலாளித்துவ தேவையின் அடிப்படையிலான பேரம்பேசலாகும்.

இரு தரப்பினரும் தமக்கு ஏகாதிபத்தியத்தின் அரவணைப்பில் இருந்து மட்டுமே இலாபம், சலுகை என்பன கிடைக்கும் என்பதை நன்கறிவர். நிலைமை இவ்வாறிருக்கையில் தான் சந்திரிக்கா பண்டாரநாயக்காவினதும் வே. பிரபாகரனதும் சமாதானம், சனநாயகத்துக்கான பேரம்பேசலுக்கு தேசிய கதையளப்புகளை முன்வைத்தபடி, வெளிநாட்டு முதலீட்டாளரை தருவிக்கும் "அரசியல் ஸ்திரத்துவத்தை" ஏற்படுத்தும் இயக்கத்தை ஆரம்பித்துள்ளனர். ஏகாதிபத்தியத்தை தத்தமது சார்பில் தலையிட வைப்பதற்காக இவ்வேளையில் பொதுஜன முன்னணியும் விடுதலைப் புலிகளும் பெரும் முயற்சியில் இறங்கியுள்ளன.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் யுத்தச் சார்பான தயாரிப்பின் அம்சமாக விளக்கும் "வொய்ஸ் ஒப் அமெரிக்கா"வை கட்டியெழுப்பும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பொதுஜனமுன்னணி அரசாங்க வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சூட்டோடு சூடாக அமெரிக்க எஜமானரை சந்திக்க சென்றார். பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்டுள்ள "மோதல் தவிர்ப்பு" உடன்படிக்கைக்கு தமது மகிழ்ச்சியை தெரிவித்த அமெரிக்க இராஜாங்க செயலாளர் வொரன் கிறிஸ்தோபர் பின்வருமாறு கூறினார்:

"வடஅயர்லாந்து, மத்தியகிழக்கு, தென் ஆபிரிக்கா என்பவற்றில் பழைய சில தடைகள் அகற்றப்பட்டுள்ளதாக எமக்கு புலனாகிறது. சிறீலங்காவின் போர்நிறுத்தம் மேலுமோர் முக்கிய நடவடிக்கையாகும். இக்காரணம் மிகவும் இன்றியமையாத ஒன்றாக விளங்குமென்றும் நாம் நம்புகிறோம்."

இக்காரணம் அதாவது 'பழைய தடைகள் அகற்றப்படல்' என்பது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தரகுடன் அவர்களது பொருளாதார, அரசியல் யுத்தத் தேவைகளின் அடிப்படையில் ஏற்பட்டவை ஆகும். அத்தகைய தேவைகளுக்கே துடிதுடிக்கும் ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகளின் சார்பில் ஐரோப்பிய யூனியனின் சார்பில் ஜனவரி இறுதியில் இலங்கை பற்றி வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்டு 1995 சனவரி 8ம் திகதியிலிருந்து அமுலாகும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஐரோப்பிய யூனியன் மிக குதூகலத்துடன் ஏற்கின்றன."

தனது எதிர்ப்புரட்சித் தயாரிப்புக்களுக்காக ஏகாதிபத்தியவாதிகளின் பக்கபலத்தை பெற மிகவும் அக்கறை கொண்டுள்ள சந்திரிகா பண்டாரநாயக்கா சனவரி 30ம் திகதிய ஐ.டி.என். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் "அனைத்துலக சமூகத்திடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளக் கூடிய எந்தவொரு உதவியும் பெரும் உபகாரமாக இருக்கும்" என்றார். ஐக்கிய நாடுகளின் பேரிலோ அல்லது வேறெந்த வழியிலோ ஏகாதிபத்திய இராணுவ தலையீட்டுக்கான நிபந்தனைகள் உருவாகும் போக்கும் பேச்சுவார்த்தையிடையே அபிவிருத்தி கண்டது. பொதுஜன முன்னணி அரசாங்கமும் ஏனைய முதலாளிகளும் தமது தேவைகளை நிறைவேற்ற இனவாத கொலைகாரர் ஆயுதத்தை பயன்படுத்த எந்த வேளையிலும் தயார். 'திவயின' போன்ற முதலாளித்துவப் பத்திரிகைகளில் இனவாத ஆத்திரமூட்டல் மிகவும் கேடுகெட்ட விதத்தில் எழுச்சி கண்டுள்ளது. 'லீ மொன்' பிரான்சிய முதலாளித்துவ பத்திரிகைக்களித்த பேட்டியில் அரசாங்கத்துக்கு யுத்தத்தை வெல்லவும் முடியும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டது. சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா இந்த கடைகெட்ட சிங்கள இனவாத ஆயுதத்தையே தூக்கிப் பிடித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தமக்கு நலன் கிட்டுவதற்காக-விசேடமாக ஐரோப்பிய முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு முறைப்பாடு செய்ய முற்படுவதோடு "சுயாட்சி" மூலம் ஏகாதிபத்தியத்துக்கு முதலீட்டு பிரதேசத்தையோ, யுத்த முகாமுக்கான பகுதியையோ வழங்கி தமிழரை சுரண்ட இடமளிக்கவோ தான் விருப்பமென்று வெளிப்படுத்தவும் கூடும்.

சந்திரிகா பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் சமாதான முயற்சியின் கங்காணிகளாக கச்சை கட்டியுள்ளவர்கள் சமசமாஜ, கம்யூனிச கட்சி தலைமைகளே. புத்திசீவிகள் எனப்படும் கும்பலினைச் சூழ்ந்து இந்த சமாதான ஏலம் தொடர்கிறது. நவ சமசமாஜ பப்லோவாதிகள் தமிழ் முதலாளித்துவ கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு இணைப்பு உட்பட்ட "4 அம்ச வேலைத்திட்டம்" என்ற முதலாளித்துவ முன்நோக்கினை உச்சாடனம் செய்கின்றனர்.

முதலாளித்துவ வர்க்கமும் அதன் கையாட்களும் ஏகாதிபத்திய தேவைகளை பூர்த்திசெய்யும் மரணக் குழிகளுக்கே வழி கோலுகின்றன. 1987ல் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ.தொ.கா. துரோகிகள் இந்திய-இலங்கை ஒப்பந்தம், இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு முழுமையாக ஆதரவு வழங்கின இதனூடாகச் சமாதானமும் சனநாயகமும் தமிழ் மக்களது இனப்பிரச்சினையும் தீர்க்கப்படும் என்று கூறி வடக்கு-கிழக்கு மக்களையும் தென் மாகாண மக்களையும் மரணக் கிடங்கினுள் தள்ளினர். இன்று ஏகாதிபத்தியத்தினதும் இலங்கை முதலாளித்துவத்தினதும் நெருக்கடி மிகவும் உக்கிரம் கண்டுள்ளது. இலங்கை சிங்கள-தமிழ் முதலாளிகள் முதலாளித்துவ முகாமுக்குள் ஒன்றுபட்டு இன்று தொழிலாள, ஒடுக்கப்பட்ட மக்களை அடக்கி ஒடுக்கவும் தமது காலனித்துவ சுரண்டலையும் ஏகாதிபத்திய தலையீட்டையும் வேண்டி செயற்படுகின்றன.

தமிழ் இனப்பிரச்சனையை தீர்க்கவும் காலனித்துவ சுரண்டல் தயாரிப்புகளைத் தோற்கடிக்கவும் முதலாளித்துவத்திலிருந்து சுயாதீனமான அரசியல் முன்நோக்கின் அடிப்படையில் தொழிலாள. ஒடுக்கப்பட்ட மக்கள் தொழிலாள வர்க்க தலைமையின் கீழ் அணிதிரட்டப்படுவது இவ்வேளையில் மிகவும் தீர்க்கமானதாகும். வர்க்க உணர்வுள்ள தொழிலாளர், ஒடுக்கப்பட்ட மக்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட உடனடியாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணையவேண்டும்.

❐ வடக்கு-கிழக்கிலிருந்து சிறீலங்கா இராணுவத்தை அகற்று!

❐ இனவாத யுத்தத்தை நிறுத்து!

❐ தமிழ் ஈழ-இலங்கை சோசலிசக் குடியரசுக்காகப் போராடு!

# தாதிமார்களையும் டாக்டர்களையும் முட்டி மோதவைப்பதை நிறுத்து!

தாதிமார் சங்கத் தலைவர்களும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர்களும் தாதிகளையும் டாக்டர்களையும் ஆளுக்காள் எதிராக முட்டி மோதவைக்கும் ஆத்திரமூட்டும் இயக்கமொன்றை ஆரம்பித்துள்ளனர். இவ்விரு சங்கங்களதும் தலைவர்களும் இன்று பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரச வேட்டைக்கான நிலைமைகளைச் சிருஷ்டிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

தாதிமார்கள் கடமையில் இருந்து தவறின் 'படுக்கை அட்டையில்' குறித்து வைக்கும்படி வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைமை தனது அங்கத்தவர்களுக்கு உத்தரவிட்டுள்ளது. இதனால் மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியிலும் காலி கராபிட்டிய, மஹமோதர ஆஸ்பத்திரிகளிலும் மோதல்கள் ஏற்பட்டுள்ளன. தாதிமார்கள் தமக்கு உடல் ரீதியில் தாக்குதல் நடாத்த முற்பட்டதாக வைத்திய அதிகாரிகள் சங்கம் பொலிசுக்கு முறைப்பாடு செய்துள்ளதோடு, இதையிட்டு பொலிசார் உடனடியாகத் தலையிட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளது.

இகற்கிடையே தாதிமார்களை பிளவுபடுத்தும் பொருட்டு பெப்ரவரி 2ம் திகதி சிறீலங்கா ஐக்கிய தாதிமார் சங்கம் என்ற பேரில் ஒரு கருங்காலி தொழிற் சங்கத்தை திணிக்க பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கைக்கூலிகள் சிலர் ஈடுபட்டதோடு, அதன் ஆரம்ப வைபவத்துக்கு சுகாதார அமைச்சர் பவுசியும் வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் டாக்டர் லலித் சந்திரதாசவும் அழைக்கப்பட்டிருந்தனர். இப்புதிய சங்கம் அரசாங்கத்தின் ஆதரவுடனேயே அமைக்கப் பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பவுசி 400 தாதிமார்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை கையளிக்கப் போவதாகக் கூறி தாதிமார்களுக்கு எதிரான ஒடுக்குமுறை பொல்லை உயர்த்தியுள்ளார். இதற்கு தாதிமார் சங்கத் தலைவர் முருத்தேட்டுவ ஆனந்த தேரரின் பதில் என்ன தெரியுமா? 800 டாக்டர்களுக்கு எதிராகத் தாம் குற்றச்சாட்டுக்களைச் சமர்ப்பிக்கப் போவதாகக் கூறிக் கொண்டுள்ளார்.

தொழிற்சங்கத் தலைவர்களைக் கொண்டு கிளறிவிட்டுள்ள ஆத்திரமூட்டல்களை டாக்டர்களுக்கும் தாதிமார்களுக்கும் மற்றும் சகல சுகாதார ஊழியர்களுக்கும் எதிரான வேட்டைகளுக்கு அரசாங்கம் பயன்படுத்துவது நிச்சயம். சுகாதார சேவையை வெட்டியதால் ஏற்பட்டுள்ள டாக்டர்கள், தாதிமார்கள் மற்றும் ஊழியர்கள் தட்டுப்பாடு, மருந்து வகைகளின் பற்றாக்குறைகள், வசதிகள் இல்லாமையால் உருவாகியுள்ள பிரச்சினையே இந்த ஆத்திரமூட்டல்களை தூண்டிவிட வழிவகுத்துள்ளது.

முதலாளித்துவ அரசாங்கத்தின் திட்டங்களை சுகாதார ஊழியர்கள் மீது திணிக்கப் போடப்பட்டுள்ள திட்டங்களுக்கு எதிராக சுகாதார துறையின் சகல பிரிவுகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் கைகோர்த்துக் கொள்வதும் மற்றும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுடன் ஐக்கியப் பட்டு நிற்பதற்குமான காலம் கதவைத் தட்டுகின்றது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் தொழிற்சங்கத் தலைவர்களதும் பொறிங்கிடங்குகளில் வீழ்ந்து விடாமல் நனவான பகுதியினர் போராட்ட ஐக்கியத்தினை உருவாக்கவும் அதற்கான வேலைத்திட்டத்தினை தயார் செய்யவும் முன்வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் முதலாளித்துவ நெருக்கடி குமுறிக் கொண்டுள்ளது

கடந்த டிசம்பர் கடைப் பகுதியில் இந்திய நரசிம்மராவ் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான அர்ஜுன் சிங் இராஜினாமாச் செய்ததோடு ஆளும் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தின் அரசியல் நெருக்கடி உக்கிரம் கண்டது. அர்ஜுன் சிங் தமது இராஜினாமாக் கடிதத்தில் நரசிம்மராவ் தலைமையை வன்மையாகக் கண்டனம் செய்துள்ளதோடு ஒரு விடயத்தினை சுட்டிக் காட்டியும் உள்ளார்.

''பொருளாதார தாராண்மை விதிமுறைகளை மக்களின் அவசியங்களுடன் இணைக்கவும் அதைப் பற்றிய அவர்களின் பீதியைப் போக்கவும் இந்த விதிமுறைக்கு ஒரு மனிதநேயத் தோற்றம் தரவும் தெளிவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.''

அர்ஜுன் சிங் ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு கூறுவது என்ன? எஜமான்களே! பெரும் தாக்குதல் நடாத்தப் போகின்றீர்கள். இந்நிலையில் மக்கள் பெரும் கொதிப்பு அடைந்துள்ளார்கள். இவர்களை ஏமாற்றித் தள்ள ஏதாவது செய்ய வேண்டும். ஏகாதிபத்திய முதலீடுகளை இந்தியாவுள் இறக்குவதற்கு எனது எதுவிதமான எதிர்ப்பும் கிடையாது.

அர்ஜுன் சிங்கின் இராஜினாமாவுக்கு டிசம்பரில் இந்தியாவில் நடைபெற்ற மாநிலத் தேர்தல்களில் ஆளும் காங்கிரசுக்கு ஏற்பட்ட படுதோல்வியே காரணம். முக்கிய இரண்டு மாநிலங்களான கர்நாடகத்திலும் ஆந்திராவிலும் காங்கிரஸ் கட்சி படுதோல்வி கண்டுள்ளது, ஆந்திரா மாநிலத்தில் மொத்தமுள்ள 292 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி 25 தொகுதிகளை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. கர்நாடகத்தில் 224 தொகுதிகளில் 35 தொகுதிகளில் . மட்டுமே காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. ஆந்திராவில் முன்னாள் காங்கிரஸ் முதல் அமைச்சர் உட்பட ஐவரைத் தவிர ஏனைய சகல அமைச்சர்களும் தோல்வி கண்டனர். இம்மாநிலங்கள் இரண்டிலும் காங்கிரஸ் கட்சி மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டது. அத்தோடு காங்கிரஸ் கட்சிக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவிகளும் இல்லாமல் போயுள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட இத்தோல்வி வரலாற்றில் இடம்பெற்ற படுமோசமான ஒரு தோல்வியென முதலாளித்துவ அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியாவில் அதிக ஜனத்தொகையைக் கொண்ட மேற்கு வங்காளம் பீஹார், உத்தரப் பிரதேசம் குஜராத், ஒரிஸ்ஸா, ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு எதிலும் காங்கிரஸ் ஆட்சி இல்லாமல் போயுள்ளது. முக்கிய மாநிலங்களில் மஹாராஷ்டிரத்திலும் கேரளாவிலும் மட்டுமே இன்று காங்கிரஸ் ஆட்சி எஞ்சியுள்ளது. காங்கிரஸ் கட்சி நூற்றுக்கு 30 வீத வாக்குக்களைத் தன்னும் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலை இம்மாநிலங்களில் உருவாகியுள்ளது.

ஸ்டாலினிஸ்டுக்களின் ஆதரவோடு ஏகாதிபத்திய எதிர்ப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமையை காங்கிரஸ் கட்சி கொள்ளையடித்தது. தேசிய முதலாளி வர்க்கத்தின் நலன்களின் பேரில் 1947ல் ஆட்சியை பொறுப்பேற்றுக்கொண்ட காங்கிரஸ் ஆட்சியாளர்களின் மக்கள் ஆதரவு அடிப்படை சிதறுண்டு போய் நீண்ட காலமாகின்றது. 1977ல் அதற்கு



நரசிம்மராவ்

மத்திய அரசாங்க ஆட்சி இல்லாமல் போனதோடு மீண்டும் 1989ல் அதே நிலைமை உருவானது. இவ்விரு சந்தர்ப்பங்களிலும் இந்திய முதலாளி வர்க்கம் காங்கிரஸ் கட்சியை மீண்டும் ஆட்சிப் பீடத்துக்கு அழைத்ததற்கு அதற்கு வேறு மாற்று வழிகள் இல்லாமல் போனதே காரணம்.

1991ல் நரசிம்மராவ் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. இது ஏகாதிபத்தியவாதிகளின் ஊடுருவலுடனான கட்டளையின் பேரில் இடம்பெற்றது. அச்சமயத்தில் இந்திய முதலாளி வர்க்கம் வெளிநாட்டு கடன் கட்டணங்களை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருந்து வந்தது. இக் கட்டத்தில் தமது தலையீட்டினை ஆரம்பித்த ஏகாதிபத்தியவாதிகள் நரசிம்மராவை ஆட்சிக்கு கொணர்ந்ததோடு இந்தியாவை ஒரு முழு காலனியாக்கும் வேலைத்திட்டங்களில் இறங்கினர். பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் கொண்டிராத நரசிம்மராவ் அரசாங்கத்தைக் கொண்டு தமது வேலைத்திட்டத்தினை அமுல் செய்கையில் ஏகாதிபத்தியவாதிகள் எதிர்க்கட்சியினரின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதில் வெற்றி கண்டனர்.

நரசிம்மராவ் அரசாங்கம் இந்தியாவை 'திறந்து விடும்' கொள்கையை கடைப் பிடித்ததைத் தொடர்ந்து இந்தியாவினுள் 20 பில்லியன் டாலர் முதலீடு [illegible] யது. இதனால் ஏகாதிபத்திய வாதிகள் கோடானு கோடி ரூபாக்களை இலாபமாக கறந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. இதனால் ஏழை ஜனத்தொகையில் பெரும்பான்மையினர் மேலும் மேலும் வறுமையின் பிடிக்குள் தள்ளப்பட்டதோடு சுமார் 10 இலட்சம் வேலைகளும் நாசமாக்கப்பட்டது. சுகாதார, கல்வி, செலவுகளும் உணவு, பசளை மானியங்களும் பெருமளவில் வெட்டித்தள்ளப்பட்டதோடு பணவீக்கம் இரட்டை இலக்கத்தில் உயர்ந்து செல்லத் தொடங்கியது.

ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகளில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த இறுக்கமான போக்குக்குகள் தளர்த்தப்பட்டதனாலும் ரூபாவின் மதிப்பிறக்கத்தினாலும் 1990–94ல் பொதுப் பணவீக்கம் 7.6 வீதமாக அதிகரித்தது. 1994–95ல் இது 10.6 ஆகும். இக்கால கட்டத்தில் உணவுப் பொருட்கள் சம்பந்தமாக மட்டும் விலை வீக்கம் 14.2 ஆக அதிகரித்தது. இந்தியாவினுள் பொருளாதார 'திறந்து விடுதல்' வறுமை தொடர்பான 1994ன் கடைப்பாக அனைத்துலக ஆய்வின்படி முழு ஜனத்தொகையின் படுஏழை மக்களின் சதவீதம் 1989ன் பின்னர் 6.4ல் அதிகரித்துள்ளது. கிராமப்புறங்களில் 8 வீதத்தினால் உயர்ந்துள்ளது, வறுமையினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 1989ல் 281 மில்லியனில் இருந்து 1992-93ல் 355 மில்லியனாக அதிகரித்துள்ளது.

1947 தொடக்கம் —அரை நூற்றாண்டு காலம்— காங்கிரஸ் தலைமையிலான முதலாளி வர்க்கம் இந்தியத் தொழிலாளர் வர்க்கத்துக்குப் பெற்றுக் கொடுத்தது பட்டினியும், தொற்றுநோய்களும், மக்கட் படுகொலைகளுமே, ஆனால் 1990பதுகளில் உலக உற்பத்தி பூகோளமயமானதைத் தொடர்ந்து நரசிம்மராவ் அரசாங்கம் 1991 – 94 வரை தொடுத்த தாக்குதல் புதிய கட்டத்தினை எட்டியுள்ளது. இத்தாக்குதல்கள் இலட்சோப இலட்சம் தொழிலாளர்கள் கலந்து கொண்ட வேலை நிறுத்தங்கள் மூலமும் விவசாயிகளின் ஆர்ப்பாட்டங்கள் மூலமும் காங்கிரசை துடைத்துக் கட்டும் மக்களின் வாக்குக்கள் மூலமும் வெளிப்பட்டுள்ளது.

தேர்தல் தோல்விச்கு காங்கிரஸ் ஆட்சியின் ஊழலும், கோஷ்டி மோதல்களுமே காரணம் எனக் காட்டுவதில் முதலாளித்துவ விமர்சகர்கள் முன் நிற்கின்றனர். உண்மையில் இவை முதலாளித்துவ ஆட்சியின் நெருக்கடியை உக்கிரமாக்குகின்றது, அத்தோடு இவை முதலாளித்துவ வங்குரோத்தின் பெறுபேறுகளாகும். ராஜீவ் காந்தியின் காலத்தில் இந்திய இராணுவத்துக்கு ஆயுத விநியோகம் செய்து வந்த போபர்ஸ் கம்பனியிடமிருந்து பெரும் இலஞ்சம் பெற்றமையும் நரசிம்மராவ் காலத்தில் கோடானு கோடி ரூபா பங்குமுதல் சந்தை மோசடிகளில் ஈடுபட்டமையும் 1500 கோடி சீனி வர்த்தக ஊழல்களும் அம்பலத்துக்கு வந்தன. இன்று புனிதராக நடிக்கும் அர்ஜுன் சிங் உட்பட்ட இந்த ஊழல் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளாத காங்கிரஸ் பிரமுகர்களே கிடையாது. அர்ஜுன் சிங் 1970 பதுகளில் மத்திய பிரதேச மாநில முதல் அமைச்சராக இருந்தபோது சுர்ஹான் லொத்தர் மோசடி தொடர்பாக நீதிமன்றம் சென்றவர்.

நரசிம்மராவுக்கு எதிராகத் தலைநீட்டியுள்ள கும்பலும் மோசமான உள்வாரி முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. சோனியா காந்தி தனது குடும்ப நலன்களுக்காக நின்றுவரும் அதே வேளையில் அர்ஜுன் சிங் மூஸ்லீம், தாழ்த்தப்பட்டோர் எனப்படுவோர், ஸ்டாலினிஸ்டுகளின் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கின்றார். அதற்கு ராஜீவ் காந்தியின் பெயரைப் பாவிக்கவும் முயற்சிக்கிறார்கள்.

அத்தோடு பல துண்டுகளாகப் பிளவுண்டு போய்க் கிடக்கும் இந்திய ஸ்டாலினிசக் கட்சிகள் உள்வாரி மோதுதல்களில் இறங்கியுள்ளன. இதற்கு ஜோதிபாசுவுக்கும் நம்பூதிரிபாத்துக்கும் இடையேயான பிளவு நல்ல எடுத்துக்காட்டு. கடந்த டிசம்பரில் கல்கத்தாவில் நடைபெற்ற மார்க்சிசக் கம்யூனிஸ்ட் கட்சியின் —C.P.I(M)— அரசியல் குழுக் கூட்டத்தில் பங்குபற்றிய பகுதியினரின் கருத்துக்களை மேற்கோள் காட்டும் 'ஹிந்து' பத்திரிகை காங்கிரஸ் கட்சியுடன் நெருக்கமான உறவை எதிர்பார்ப்பதாக சுட்டிக் காட்டியுள்ளது. ''நாம் காங்கிரசுக்குள் இடம்பெறும் சம்பவங்களை பொறுமையுடன் பார்த்திருப்போம்'' என ஜோதிபாசு கூறியுள்ளார்.

இந்திய முதலாளித்துவ ஆட்சியின் நெருக்கடி உலக ஏகாதிபத்தியவாதிகளிடையேயான போராட்டம் உக்கிரமடைந்துள்ள நிலையிலேயே ஏற்பட்டுள்ளது. இந்தியாவினுள்ளான நெருக்கடியும், இந்தியத் துணைக் கண்டம் பூராவுமான நெருக்கடியும் உலக முதலாளித்துவ நெருக்கடியின் ஒரு பிரிவாகும். பங்களாதேஷிலும் பாகிஸ்தானிலும் முதலாளித்துவ அரசுகள் உள்நாட்டு யுத்தத்தின் மத்தியில் தகர்ந்து கொட்டும் நிலைக்கு வந்துள்ளதோடு துணைக் கண்டத்தின் ஆட்சியாளர்கள் தொழிலாளர் வர்க்கத்தை சுரண்டித்தள்ளி தமது உயிரைப் பிடித்து வைப்பதற்கான நடவடிக்கையாக்கி உள்ளது. இன்று இந்தியாவும், பாகிஸ்தானும் காஷ்மீர் யுத்தம் பற்றிப் பேசுவது இந்த நிலைமையிலேயே.

அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்தை ஐக்கியப் படுத்துவதைத் தவிர வேறு வழிகள் இந்தியத் தொழிலாளர் வர்க்கத்துக்குக் கிடையாது. இந்தியாவில் இந்த வழியில் போராடுவது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுக்கு ஆதரவு தரும் ட்ரொட்ஸ்கிச அமைப்பான சோசலிசத்த தொழிலாளர் கழகம் மட்டுமே.


வாசியுங்கள்!

**சோவியத் யூனியன் எங்கே செல்கின்றது?**

விலை ரூபா. 25.00

தொடர்புகளுக்கு:- ஆனந்த வக்கும்புர,
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு—10.



சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!**

பெயர்: ......................................

முகவரி: ......................................

......................................

......................................

தொழில் / நிலைமை: ......................................

தொலைபேசி இலக்கம்: ......................................

இப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளின் அரசியல் ஆத்திரமூட்ட

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளையின் அறிக்கை

அக்டோபர் 23 ஞாயிற்றுக் கிழமை தமிழீழ விடுதலைப் புலிகள் 'யுத்தமும் சமாதானமும்' என்ற தலைப்பில் பாரிசில் ஒரு பகிரங்க கூட்டத்தினை ஏற்பாடு செய்தனர், இந்தக் கூட்டம் ''தமிழீழத்தில் யுத்தமும் சமாதானமும் பற்றிய இன்றைய நிலைமை பற்றிக் கலந்துரையாடும்'' என ஒரு புதினப் பத்திரிகை விளம்பரம் மூலம் அறிவிக்கப் பட்டது, அத்தோடு இந்த கூட்டத்தில் தமிழீழத்தின் ஒரு கத்தோலிக்க பாதிரியாரும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பல்கலைக் கழக பேராசிரியர்களும் பாரிசில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினரும் உரை நிகழ்த்துவர் என இவ் விளம்பரத்தில் மேலும் அறிவிக்கப்பட்டது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவினதும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளையினதும் உறுப்பினர்கள் பாரிசில் உள்ள தமிழ் தொழிலாளர்களிடையே நான்காம் அகிலத்தின் புரட்சிகர அரசியலுக்காகப் போராடும் பொருட்டு இக் கூட்டத்தில் தலையிட்டனர். இத்தலையீட்டின் போது பு.க.க.வின் பிரசுரங்கள் பங்குகொண்டவர்களுக்கு வழங்கப்பட்டன. அத்தோடு இலங்கையின் சமீபத்திய தேர்தல்கள் மீதான பு.க.க.வின் ஒரு அரசியல் குழு அறிக்கையும் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றிய மதிப்பீட்டை உள்ளடக்கிய இரண்டு பிரசுரங்களும் அங்கு விநியோகிக்கப் பட்டன.

எமது குழு அங்கு சென்றதுதான் தாமதம் விடுதலைப் புலிகளின் அமைப்பாளர்களிடையே ஒரு பாணியிலான அதிர்ச்சி இழையோடியது. கூட்ட மண்டபத்தின் முன்னால் ஒரு கோஷ்டி விடுதலைப் புலிகள் இயக்கக் குண்டர்கள் நிறுத்தப்பட்டனர். எமது குழுவின் அங்கத்தவர்கள் பிரச்சாரத்தில் இறங்கியதுதான் தாமதம் அவர்கள் ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளில் இறங்கினர். நாம் பிரச்சாரம் செய்வதை தடை செய்வதே அவர்களின் ஒரே நோக்கமாக இருந்தது; எமது அரசியலை பிரதிநிதித்துவம் செய்ய எமக்குள்ள உரிமையை வலியுறுத்திய நாம் எமது பிரச்சாரத்தைத் தொடர்ந்தோம்.

எமது அரசியல் பிரசுரங்கள் கூட்டத்தில் பங்கு கொண்டோரிடையே பெரும் ஆர்வத்தை தூண்டியது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடைந்தெடுத்த அங்கத்தவர்கள் தவிர்ந்த ஏனையோர் சகலரும் இந்தப் பத்திரங்களைச் சேகரித்தனர். பலர் கூட்ட மண்டபத்தில் இருந்து வந்து இப் பிரசுரங்களை திரட்டிச் சென்றனர்.

இக் கட்டத்தில் அதிர்ச்சியடைந்து காணப்பட்ட விடுதலைப் புலிகளின் குண்டர்கள் எமது தோழர்களை அங்கிருந்து வெளியேறும்படி இடைவிடாது ஆத்திரமூட்டியதோடு இறுதியாக எமது ஒரு அங்கத்தவரின் முகத்தில் குத்தினர். இது தனது அரசியல் எதிரிகளை எதிர்கொள்ள விடுதலைப் புலிகள் கையாளும் வழக்கத்துக்கு மாறான ஒரு விதிமுறை அல்ல. போட்டி தமிழ் அமைப்புக்களுக்கு எதிரான விடுதலைப் புலிகளின் கொடூரமும் ஈவிரக்க மற்ற தன்மையும் அனைவரும் அறிந்ததே. இந்தத் தாக்குதலிலான அடிப்படையான வேறுபாடு தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீனமான தலையீட்டை தடைசெய்யும் விடுதலைப் புலிகளின் முயற்சியாகும். அந்த விதத்தில் இது தொழிலாளர்வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் ஒரு பாரதூரமான எச்சரிக்கையாகும். நாம் இந்த ஆத்திரமூட்டலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்தோடு நாம் தொழிலாளர் வர்க்கத்தினை இந்த தாக்குதலை எதிர்க்கும்படியும் இதன் பின்னணியிலான அரசியல் நோக்கினைப் புரிந்து கொள்ளும் படியும் வேண்டுகின்றோம்.

### அரசியல் உள்நோக்கம்

விடுதலைப் புலிகள் பாரிசில் இந்த அரசியல் கூட்டத்தினை கிட்டத்தட்ட 7ஆண்டு கால இடைவெளியின் பின்னர் ஏற்பாடு செய்திருந்தனர். கடந்த காலங்களில் இதன் அரசியல் வேலையானது முக்கியமாக இறந்த அங்கத்தவர்களின் சார்பில் 'மாவீரர் தினம்' நடாத்துவதையும் கலாச்சார நிகழ்சிகளை ஏற்பாடு செய்வதையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவற்றின் மூலம் இவர்கள் ஐரோப்பாவில் உள்ள தமிழர்களை அரசியல் ரீதியில் கட்டுப்படுத்த முடிந்தது. வழக்கத்துக்கு மாறாக விடுதலைப் புலிகள் ஒரு அரசியல் கூட்டத்தை ஏற்பாடு செய்ததானது அதன் அங்கத்தவர்கள் ஆதரவாளர்கள் இடையே அதிகரித்த விதத்தில் வளர்ச்சி கண்டுவரும் எதிர்ப்பின் ஒரு விளைவாகும். கடந்த காலத்தில் போலல்லாது விடுதலைப் புலிகள் இலங்கை அரசாங்கத்துடனான இன்றைய பேச்சுவார்த்தைகளை 'தமிழீழத்தை' அடைவதற்கான ஒரு 'உபாயம்' ஆகக் கட்டியடிக்க முடியாது போயுள்ளது. அடிப்படையில் இது பீ.எல்.ஓ. ஆ.தே.கா. போன்ற இயக்கங்களின் பரிணாமத்துடன் தொடர்புபட்டுள்ளது. சிறப்பாக பீ.எல்,ஓ வுக்கும் இஸ்ரேலுக்கும் இடையேயான 'சமாதானமும்' அதைத் தொடர்ந்து பீ.எல்.ஓ. தலைமை விடுதலைப் போராளிகளை' பாலஸ்தீன மக்களின் பொலிஸ் படையாக நிறுத்தியுள்ளமையும் தமிழ் தொழிலாளர்களின் முன்னேற்றமான பகுதியினரிடையே ஒரு விமர்சன கண்ணோட்டத்திலான சிந்தனையைச் சிருஷ்டித்துள்ளது.

இதுதான் விடுதலைப் புலிகள் மதகுருமாரையும் பேராசிரியர்களையும் பிடித்து 'இலங்கையிலான வரலாற்று சமாதான முயற்சியை' விளக்க வைத்தது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளையினர் பத்திரங்களுடன் மேற்கொண்ட தலையீடு இதற்கு மாறாகத் தமிழ் பிராந்தியத்திலான சமாதானத்தை அம்பலப்படுத்தியது. இது முழுத் தீவிலுமான அதன் கொடூரமான அடக்கு



பு.க.க. வெளிநாட்டுக் கிளையின் (ஜேர்மனி) பிரச்சாரத்தில் பங்குகொண்ட தமிழ் தொழிலாளர்களும் இளைஞர்களும்

முறையை உக்கிரமாக்கும் முதலாளி வர்க்கத்தின் ஒரு முயற்சியாகும். விடுதலைப் புலிகள் கூறிக் கொள்வது போல் அரசாங்கம் அதனது நீண்டகால இராணுவத் தோல்விகளை உணர்ந்து கொண்டுள்ளது எனவும் ஆதலால் தமிழ் மக்களுக்கு சலுகைகளை வழங்குவதை விட அதற்கு வேறு வழி இல்லை எனவும் வாதிடலாம். நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கான அரசாங்கத்தின் விருப்பும் வட மாகாணத்துக்கான நீண்டகால பொருட்களின் போக்குவரத்து தடையின் தளர்வும் ஒரு தொகை சலுகைகளின் ஆரம்பமாகக் கொள்ளப்படுகின்றது.

அரசாங்கத்தின் நிஜ நோக்கம், இந்தச் சலுகைகள் மூலம் தமிழ் மக்களின் எந்தவொரு ஜனநாயகத் தேவைகளையும் நிறைவேற்றி வைப்பது அல்ல. இன்றைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் எந்தவொரு ஜனநாயக உரிமைகளையும் ஊர்ஜிதம் செய்வதற்கு அல்ல. இதன் ஒரே இலக்கு ஒரு சர்வாதிகாரத்துக்கு செல்லும் விதத்தில் எஞ்சியுள்ள ஜனநாயக உரிமைகளையும் துடைத்துக் கட்டுவதேயாகும்.

இது அரசாங்க வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் மேல் சமீபத்தில் விதிக்கப்பட்ட 'உத்தியோக பூர்வமற்ற' தணிக்கையின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. ''பத்திரிகைச் சுதந்திரத்தினை'' உத்தரவாதம் செய்யவெனக் கூறி சட்டவிதிகளை திருத்தியதன் மறுநாள் — நவம்பர் 28ம் திகதி — பிரதமரின் அலுவலகம் லேக்ஹவுஸ் பிரசுரங்களின் மேல் ஒரு தணிக்கையைத் திணித்தது. அரசுடமை லேக்ஹவுஸ் பிரசுரங்களின் ஆசிரியர் குழு முன்கூட்டியே பத்திரிகைகளை அச்சிடுவதை நிறுத்திக் கொள்ளும்படியும் பிரதமர் விருப்பும் விதத்தில் தலைப்புச் செய்திகளை திருப்பி எழுதும்படியும் சட்டளையிடப்பட்டது. அத்தோடு ஆசிரியர் குழு கட்டுரைகளை அச்சிட அனுப்புவதற்கு முன்னதாக பிரதமரினால் நியமனம் செய்யப்பட்ட ஒரு ஆணையாளருக்கு அவற்றை அனுப்பி வைக்க வேண்டும் என வேண்டப்பட்டது. இதே சமயத்தில் அரசாங்கம் புதிய இராணுவ சாதனங்களை கொள்வனவு செய்யும் பொருட்டு அனைத்துலக ரென்டர்களை கோரியுள்ளது.

இந்தப் புதிய அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் ஒரு தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டிய அவசியம், சிறப்பாக தெற்கில் உக்கிரம் கண்டுவரும் வர்க்க குரோதத்திற்கு முகம் கொடுக்கும் முகமாக அதன் இராணுவ இயந்திரத்தினைப் பலப்படுத்த வேண்டிய அவசியத்தினால் ஏற்பட்டுள்ளது. சமீப காலங்களில் தமிழ் முதலாளி வர்க்கத்தின் ஆளுமை கொண்ட சக்தியாகத் தலையெடுத்த விடுதலைப் புலிகள் இலங்கை முதலாளி வர்க்கத்துடன் ஒத்துழைப்புக்குக் கரங்களை நீட்டியுள்ளது. இதற்குப் பதிலாக இலங்கை முதலாளி வர்க்கம் விடுதலைப் புலிகள் தமிழ் பிராந்தியங்களை அதன் பொலிஸ், நீதிமன்றம், சிறைச்சாலை மூலம் அதிகார பூர்வமாகக் கட்டுப்படுத்த அனுமதிக்கின்றது. அத்தகைய ஒரு 'சமாதானம்' தமிழ் முதலாளி வர்க்கம் அதனது 'சொந்த' தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் சுரண்டுவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்கும்,

### அனைத்துலக முக்கியத்துவம்

இந்த சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினதும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனினதும் தனிப்பட்ட ஒரு கண்டுபிடிப்பு அல்ல. தமிழ்ப் பிராந்தியங்களின் மோதுதல்களுக்கான ஒரு தீர்வினைக் காண வேண்டியதன் அவசியம் பன்னாட்டுக் கம்பனிகளின் மேலாய முதலீட்டுக்கான முன்நிபந்தனையாக உள்ளது. சுதந்திர வர்த்தக வலயங்களில் சுரண்டலைத் தொடரவும் தீவின் ஏனைய பிராந்தியங்களில் புதிய வர்த்தக வலயங்களை திணிக்கவும் வடக்கில் ஒரு அமைதி சூழ்நிலை நிலவுவது முக்கிய காரணியாகப் படுகின்றது. ''சோசலிச'' இந்தியாவுக்கு எதிரான ஏகாதிபத்தியத்தின் இராணுவ நலன்களுக்கு விரகி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீவாக இலங்கை பனிப்போர் காலத்தில் விளங்கியது. சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின்னரும் பிராந்தியத்தின் இன்றைய பொலிஸ் காரனாக — ஏகாதிபத்தியத்தின் சார்பில் இந்திய முதலாளி வர்க்கம் பரிணாமம் கண்டதோடு இந்து சமுத்திரத்தில் இராணுவ சமபல நிலைமை அமெரிக்க நலனுக்கு உகந்ததாக மாற்றம் கண்டுள்ளது. இன்று இந்தியத் துணைக் கண்டத்தினை தனியொரு பொருளாதார அலகின் கீழ் அணிதிரட்டுவது எகாதிபத்திய வல்லரசுகளின் முக்கிய பணியாக உள்ளது. தென் கிழக்கு ஆசிய பொருளாதார நிபுணரான அமெரிக்கப் பேராசிரியர் ஜேம்ஸ் ஈ, ரீன்முத் சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்தார். அவர் இலங்கையை சிங்கப்பூரைப் போன்று தகவல், முகாமையியல், நிதிச் சேவைகளை வழங்கும் ஒரு மூளை மையமாக (Brain Centre) அமைக்கும் படி ஆலோசனை கூறினார். இது துணைக் கண்டத்தின் ஏனைய பாகத்தில் முதலாளித்துவத் தொழிற்பாட்டுக்கு வேண்டிய தகவல், முகாமையியல், நிதிச்சேவைகளை வழங்குவதற்கு ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களுடன் செய்துகொள்ளும் நெருங்கிய ஒத்துழைப்பு மூலம் இலங்கை இவற்றில் பலகட்டங்களை பாய்ந்து கடக்க முடியும். அவரின் வார்த்தையில் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றார்: ''நீங்கள் சிங்கப்பூரை ஒத்த பல ஒருமைப்பாடுகளை — உயர்ந்த படிப்பறிவு விரகி முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம் — கொண்டுள்ளீர்கள். சிங்கப்பூர் அமைவிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...லை எதிர்த்துப் போராடு!

190 மில்லியன் மக்களைக் கொண்ட இந்தோனேசியாவுக்கும் 18 மில்லியன் மக்களை கொண்ட மலேசியாவுக்கும் 60 மில்லியன் மக்களைக் கொண்ட தாய்லாந்துக்கும் அயலவர் என்ற முறையில் முழுப் பிராந்தியத்துக்கும் தகவல் நிதிச் சேவைகளை வழங்கும் வாய்ப்பை வழங்கியுள்ளது. அவ்வாறே இலங்கையின் அமைவிடம் பலகோடி மக்களுடன் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், பர்மாவுக்கு அத்தகைய சேவைகளை வழங்குவதற்கான கதவுகளை திறந்து வைத்துள்ளது.'' (இலங்கை சண்டே ரைம்ஸ் — 2 - 10 - 94)

## ஆயுதப் போராட்ட நப்பாசைகள்

விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவத்துக்கு எதிரான அதன் முதலாவது கெரில்லாத் தாக்குதலை நடாத்தி 10 ஆண்டுகள் கடந்து விட்டன. விடுதலைப் புலிகளின் அட்டூழியங்களுக்கு இடையேயும் அது அரசபடைகளுடன் போரிட்டு உயிர்துறந்த நூற்றுக் கணக்கான இளைஞர்களின் உயிர்த்தியாகங்களைப் பயன்படுத்தி தமிழ் வெகுஜனங்களிடையே செல்வாக்கை ஏற்படுத்தியது. இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு' எதிராக போராட இளைஞர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து வந்த அதே வேளையில் இயக்கத் தலைவர்கள் கொழும்பு அரசாங்கத்துடன் ஒரு உடன்படிக்கைக்கான பகடைக்காயாக அவர்களைப் பயன்படுத்தினர். இந்த உடன்படிக்கைகள் தோல்வி கண்ட போதெல்லாம் — 1987 இந்திய - இலங்கை உடன்படிக்கை அல்லது அதைத் தொடர்ந்து வந்த விடுதலைப் புலிகள் - பிரேமதாச பேச்சுவார்த்தைகள் — விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் இராணுவத்தை எதிர்கொள்ள மீண்டும் இளைஞர்களை ஆயுதம் தூக்கும்படி கோரினர். இந்தக் கேவலமான கொள்கை இளைஞர்களிடையே பெரும் எதிர்ப்பைச் சந்தித்தது. இதனால் இவர்கள் தமது இராணுவப் பிரிவுகளுக்கு இளைஞர்களை பலாத்காரமாகத் திரட்டுவதில் ஈடுபட்டனர்,

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பாலசிங்கம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள முக்கிய இராணுவ நிலைகளில் இருந்து இலங்கைப் படைகளை வாபஸ்பெறச்செய்ய தமது அமைப்பு இனிப் போராடமாட்டாது என அறிவித்ததுடன் அதன் ''ஆயுதப் போராட்டத்தின்'' வங்குரோந்து புதிய கட்டத்தை எட்டியது. பாலசிங்கத்தின் இந்த அறிவித்தல் இதே இராணுவ நிலையைத் தாக்குவதற்கு தற்கொலைப் படையை அனுப்பிய ஒரு மாதத்தின் பின்னர் வெளிவந்தது. இந்தத் தாக்குதல் ஐரோப்பாவில் வெளிவரும் விடுதலைப் புலிகளின் வெளியீடுகளில் ஒரு மாபெரும் வெற்றியாகக் கொண்டாடப்பட்டது.

பாலசிங்கத்தின் அறிக்கை ''ஆயுதப் போராட்டத்தின்'' மூலம் தமிழ்ப் பிராந்தியங்களிலான இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஒரு முடிவு கட்டுவதற்கு மாறாக வடக்கு — கிழக்கிலான ஒரு சமாதானத் தீர்வின் பின்னர் இலங்கை இராணுவத்தை அங்கு தொடர்ந்து இருந்து வருவதன் மூலம் அது தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களை எதிர்கொள்ள உதவும்படி வேண்டுவதைக் காட்டுகின்றது.

## பு.க.க. முன்நோக்கு

விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து ஏனைய சகல தமிழ் குட்டி முதலாளித்துவக் குழுக்களும் புதிய அரசாங்கத்தின் தமிழ் பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சிகளை மகோன்னதமான தாகக் காட்டும் முயற்சியில் அணி திரண்டுள்ளன, புளொட், ஈ பீ.ஆர்,எல்.எப், ஈ பீ.டீ.பி யும் ஏனையவையும் அரசாங்கத்தின் முயற்சிகளை தலைமேல் வைத்துக் கொண்டாடுவதோடு அதற்கு ஆதரவையும் பிரகடனம் செய்துள்ளன. ஆனால் விடுதலைப் புலிகள் ஒரு தீர்வுக்கு வருமா என்பதே இவர்களுக்குள்ள பிரச்சினை.

ஒரு கொள்கைப் பிடிப்பான முறையில் இந்தப் பேச்சுவார்த்தைகளை எதிர்க்கும் ஒரே அரசியல் அமைப்பு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. அத்தகைய ஒரு ஏகாபத்திய தீர்வு தமிழர்களின் நிஜமான ஜனநாயகக் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு மாறாக சகல உரிமைகளையும் துடைத்துக் கட்டுவதாக விளங்கும் என தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் பு,க.க. எச்சரிக்கின்றது. தீவில் உள்ள ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயகக் கோரிக்கைகளை பொதுஜன முன்னணியினதும் விடுதலைப் புலிகளதும் முதலாளித்துவத் தலைவர்களில் நம்பிக்கை வைப்பதன் மூலம் அடைந்துவிட முடியாது. தொழிலாளர் வர்க்கம் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜக் கட்சிகளால் ஊக்குவிக்கப்பட்டுவந்த இந்த கருத்துக்களில் இருந்து விடுபட்டாக வேண்டும். ஜனநாயகக்கோரிக்கைகளை சோசலிசப் புரட்சியின் ஒரு பெறுபேறாக இலங்கை – தமிழீழம் சோசலிசக் குடியரசு ஒன்றியத்தின் நிர்மாணத்தின் மூலமே அடைய முடியும்.

★

### ஜேர்மன் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் மீது பொலிஸ் தாக்குதல்

# பீ.எஸ்.ஏ. தலைவரின் வீடு பொலிசாரால் சோதனை

ஜேர்மன் அரசும், நீதிமன்றமும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஜேர்மன் பகுதியான பண்ட் சோசலிஸ்டர் ஆர்பைட்டருக்கு (B.S A) எதிராக மற்றொரு அரசியல் வேட்டையை நடாத்தியுள்ளன. டிசம்பர் 1ம் திகதி காலை 7–30க்கு அரச பாதுகாப்பு பொலிஸ் படையின் அதிகாரிகள் BSA மத்திய குழுவின் வுவ்காங் சிம்மர்மனின் எசன் வீட்டுக்குச் சென்று வீட்டையும் கராஜ்ஜையும் சொந்த பொருட்களையும் சிறப்பாக வாகனாதிகளையும் சோதனையிட வேண்டும் எனக் கூறி ஒரு கட்டளையை வழங்கினர், அத்தோடு 'எந்தவொரு பொருளையும் கை எழுத்து ஆய்வுகளுக்குப் பொருத்தமான கையெழுத்துப் படிவங்களையும்' பறிமுதல் செய்ய இந்த கட்டளை அதிகாரம் வழங்கியது. இந்த அதிகாரிகள் சிம்மர்மனின் கையெழுத்துக்களைக் கொண்ட பல படிவங்களை எடுத்துச் சென்றனர்.

கடந்த கோடைக்கால ஐரோப்பிய யூனியன் தேர்தலில் வேட்பாளரை நிறுத்தும் பொருட்டு BSA நடாத்திய பிரச்சார இயக்கத்தில் சிம்மர்மன் கையெழுத்துக்களை மோசடி செய்தார் என்பதே இந்த வீட்டைச் சோதனையிடுவதற்கு சாட்டாக அமைந்தது. தேர்தல் அந்தஸ்து பெறும் பொருட்டு B S.A சமர்ப்பித்த பெட்டிசன் படிவங்களில் பெயர்கள் மோசடி செய்யப்பட்டன என அதிகாரிகள் கூறிக்கொண்டனர்.

இந்தக் குற்றச்சாட்டு இரண்டு சிறிய நகரங்களைச் சேர்ந்த மூவர் தாம் இந்தப் BSA பெட்டிசங்களில் கையொப்பம் இடவில்லை என்பதை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இவ்விரு நகரங்களையும் சேர்ந்த உள்ளூர் தேர்தல் அதிகாரிகள் B.S.A பெட்டிசன் படிவங்களில் கையொப்பம் இட்டிருந்தவர்களுடன் தனித் தனியாக தொலைபேசியில் பேசினர். பயமுறுத்தல்கள் மூலம் இவர்கள் சிலரின் கையொப்பங்கள் பொய்யான முறையில் பெறப்பட்டதாக கூற வைத்தனர்.

இந்த அடிப்படையில் ஸ்ரட்காட் பொலிசும் அரச சட்டத்தரணிகளும் சிம்மர்மானுக்கும் B.S A க்கும் எதிராக வழக்குக்களைத் தாக்கல் செய்தனர். அங்கு அதிகாரிகள் சிம்மர்மான் கூட்டம் கூடும் சட்டத்தினை மீறியதாக கூறி வழக்குத் தாக்கல் செய்தனர். ஆகஸ்ட் 17ம் திகதி — B.S.A அங்கத்தவர் லுட்விக் நீத்தமர் நவநாசிகளால் தாக்கப்பட்டதற்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அன்று — ஸ்ரட்காட் நீதிமன்றத்துக்கு வெளியே ஊர்வலம் செல்ல உதவியதாக சிம்மர்மானுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. சுமார் 40 தொழிலாளர்களும் இளைஞர்களும் நீத்தமருக்கு ஆதரவு வழங்கும் பொருட்டு நீதிமன்ற விசாரணைகளை கேட்க வந்திருந்தனர். அவர்களில் சிலர் வழக்கின் தன்மை பற்றியும் தாக்குதலின் அரசியல் பண்பு பற்றியும் கூறும் பிரசுரங்களை வழிப்போக்கர்களுக்கு விநியோகித்தனர். அவர்கள் ''பொலிசும் நீதிமன்றமும் பாசிஸ்டுகளையும் இனவாதிகளையும் காப்பதை நிறுத்து'' எனக் கோரும் பதாகைகளைத் தாங்கிக் கொண்டிருந்தனர். நீத்தமர் 1993 மே 3ம் திகதி நவநாசி குண்டனான ஒலிவர் வண்டேலால் தாக்கப்பட்டார். அந்தத் தாக்குதல் இடம் பெற்றதில் இருந்து பொலிசும் அரச சட்டத்தரணியும் அத் தாக்குதலின் அரசியல் பண்பை பூசி மெழுகவும் நவநாசிகளை மூடி மறைக்கவும் தொழிற்பட்டனர். பின்னர் அரசு பாசிஸ்டுகளால் தாக்கப்பட்டவர்களுக்கு எதிராகத் திரும்பி, குற்றச் சாட்டுக்களை தாக்கல் செய்துள்ளது!



நவநாசிகளின் தாக்குதலுக்கு உள்ளான பீ.எஸ்.ஏ. மத்திய குழு உறுப்பினர் லுட்விக் நீத்தமர்

B,S.A க்கு எதிரான புதிய குற்றச் சாட்டுக்கள் ஜனநாயக விரோதமான தேர்தல் விதிகளதும் சட்டங்களதும் [illegible]

ஐரோப்பிய யூனியன் தேர்தலில் ஏற்கனவே பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிராத சகல கட்சிகளும் பதிவு செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான வாக்காளர்களிடம் இருந்து கையொப்பங்களைத் திரட்ட வேண்டியிருந்தது. இந்த கையொப்பங்களைத் திரட்டுவதற்கான படிவங்கள் சமஷ்டி தேர்தல் அதிகாரியினால் வழங்கப்பட்டது. BSA ஐரோப்பிய தேர்தலில் பங்கு கொள்ளுவதற்கு ஆதரவாக 4500 கையொப்பங்களைத் திரட்ட முடிந்தது. இது வேட்பாளர்களை நிறுத்துவதற்கான சட்டவிதிகளை பூர்த்தி செய்தன.

இருந்த போதிலும் பிராங்போட்டுக்கு அருகேயுள்ள குட்டி நகரங்களின் உள்ளூர் தேர்தல் அலுவலகங்கள் BSA ஐந்து பெட்டிசன் படிவங்களில் மோசடி செய்துள்ளதாக சமஷ்டி தேர்தல் அதிகாரிக்கு அறிவித்தது. இந்த விடயத்தில் உள்ளூர் தேர்தல் அதிகாரிகளும் ஏனைய தேர்தல் அதிகாரிகளும் தமது சொந்த முயற்சியின் மூலம் அல்லது சமஷ்டி தேர்தல் அதிகாரியின் சார்பில் BSA க்கு ஆதரவாக கையொப்பமிட்டவர்களுக்கு தொலைபேசியில் கதைத்து அவர்கள் உண்மையிலேயே BSA க்காக கையொப்பம் வைத்தார்களா என்பதை அறிய முயற்சித்தார்கள் என்பதை சிம்மர்மான் நிலைநாட்டமுடிந்தது.

சிம்மர்மான் இந்த அரச தாக்குதலுக்குப் பொறுக்கி எடுக்கப்பட்டதற்குக் காரணம் அவர் சமஷ்டி தேர்தல் அலுவலகத்தின் விடயங்கள் தொடர்பாக BSAயைப் பிரதிநிதித்துவம் செய்ய நியமனம் செய்யப்பட்டிருந்ததே. இந்தப் பணிகள் ஜேர்மனி பூராவும் உள்ள நூற்றுக் கணக்கான தேர்தல் அதிகாரிகளுடனான கடிதத் தொடர்புகளை உள்ளடக்கிக் கொண்டிருந்தது. சிம்மர்மன் இந்த பெட்டிசன் பத்திரங்களைப் பரிசீலிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருந்தது. ஏனைய ஜேர்மனி முழுவதிலும் இருந்து இவற்றை சேகரிப்பதற்கு அவர் பொறுப்பாக இருந்தார். மூன்று விடயங்களில் அவர்கள் தாம் கையொப்பம் இட்டதை மறுத்ததோடு BSA க்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவும் விரும்பினர். இதில் இரண்டில் பெரும் வேறுபாடுகள் காணப்பட்டன: பிறந்த திகதியும் வீட்டு இலக்கமும் பிழையாக இருந்தன.

சிம்மர்மனும் BSA வழக்கறிஞர்களும் இந்த வழக்குக்களை சூழ்நிலைகளும் நீதிமன்ற கோவைகளில் உள்ள விடயங்களும் குற்றச் சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்பதையும் வழக்கு விசாரணை முடிவுக்கு வரவேண்டியதையும் வேண்டினர். அதிகாரிகள் தமது வழக்குக்கு எதுவித சட்ட அடிப்படையும் கிடையாது என்பதை அறிவர்.

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பியகம சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர் மீதான பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய சுயாதீன தொழிலாளர் விசாரணை**

# 'பியகம துப்பாக்கிப் பிரயோகத்தின் அடிப்படை உலகளாவிய முதலாளித்துவ நெருக்கடியே'

''சகல அரசியல் கட்சிகளும் பத்திரிகைகளும் பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பொலிசார் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தை மூடி மறைக்க முழுமூச்சுடன் செயற்பட்டன. 'சபசமாஜய' 'அத்த' 'ஹரய' பத்திரிகைகள் இந்த துப்பாக்கிப் பிரயோகம் பற்றிக் குறிப்பிடவே இல்லை. காலங்கடந்து இதைப் பற்றி குறிப்பிட்ட பத்திரிகைகளின் செய்திகள் இதற்கு வெள்ளைச் சுண்ணம் தடவும் முயற்சியில் ஈடுபட்டன.''

கடந்த செப்டம்பர் 5ம் திகதி பியகம சுதந்திர வர்த்தக வலய அன்சல் லங்கா அரிடெக்ஸ் கம்பனிகளின் தொழிலாளர்களின் ''சமாதான நடை பவனி''யின் மீது பொலிசார் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய சுயாதீன தொழிலாளர் விசாரணையை ஆரம்பித்து வைத்துப் பேசிய விசாரணைக் கமிட்டி தலைவி விலானி பீரிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் அமைக்கப்பட்ட இந்த விசாரணைக் குழுவின் ஆரம்பக் கூட்டம் டிசம்பர் 4ம் திகதி பேலியகொட பிரஜைகள் மண்டபத்தில் நடைபெற்ற போது அதைத் தொடக்கி வைக்கையில் விலானி பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

''இந்த விசாரணையில் செப்டம்பர் 5ம் திகதி பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தை நேரில் கண்ட சாட்சிகளின் சாட்சியங்கள் முன்வைக்கப்படும். விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்த விசாரணை சம்பந்தமான சில விடயங்களை அங்கத்தவர்களின் கவனத்துக்குக் கொணர விரும்புகின்றேன், சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, நவசமசமாஜக்கட்சியின் பூரண ஆதரவுடன் தேர்தலில் வெற்றிபெற்ற பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு கிழமைகளும் மூன்று நாட்களும் கழிவதற்குள் இத் துப்பாக்கிப் பிரயோகம் தொழிலாளர் மீது நடாத்தப்பட்டது. பல தொழிலாளர்களை படுகாயங்களுக்கு உள்ளாக்கிய இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் ஏகாதிபத்திய ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகளின் முதலீடுகளை ஊக்குவிக்கும் கொள்கையின் அடிப்படையிலேயே இடம்பெற்றது. உலகளாவியரீதியில் ஸ்டாலினிஸ்டுகளும் சமூக ஜனநாயக வாதிகளும், பப்லோவாதிகளும் முதலாளித்துவ கட்சிகளாக மாறி நடாத்திவரும் ஏகாதிபத்திய சார்பு வேலைத்திட்டத்தின் சுயகோலத்தை பியகம பொலிஸ் தாக்குதல் அம்பலமாக்கியுள்ளது. இந்த விசாரணை உலகத் தொழிலாளர் வர்க்கத்தினைப் பொறுத்த மட்டில் மிகவும் முக்கியத்துவமானது''எனவும் விலானி பீரிஸ் குறிப்பிட்டார்.

தொழிலாளர் வர்க்கக் கட்சிகள் என்று கூறிக்கொண்டு எதிர்ப் புரட்சிக் கட்சிகளாக தொழிற்பட்டுவரும் இக்கட்சிகள் தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீனமான அணிதிரள்வைத் தவிர்த்து வருவதாக விலானி பீரிஸ் குற்றம் சாட்டினார், உலகளாவிய ரீதியில் முதலாளித்துவ அமைப்பு முகம் கொடுத்துள்ள இந்த ஆழமான நெருக்கடி இந்தக் கொடிய பொலிஸ் தாக்குதல்களுக்கான அடிப்படையாக இருந்து வருவதாகவும் 1980பதுகளில் இருந்து தொழில் நுட்பம் புரட்சிகரமான முறையில் வளர்ச்சி கண்டு உற்பத்தி பூகோளரீதியில் இணைக்கப்பட்டுள்ளதாயும் அவர் மேலும் குறிப்பிட்டார், இதனால் முதலாளித்துவ தேசிய அரசின் எல்லைகளும் தனியார் சொத்துடமையின் ஆளுமையும் சவாலுக்கு உள்ளாகியுள்ளதோடு முதலாளித்துவ அமைப்பின் இம் முரண்பாடுகளின் மத்தியில் முதலாளி வர்க்கம் தமது உயிரைக் காக்கும் பொருட்டு கொடிய யுத்தத்துக்கும் தொழிலாளர் கொலைகளுக்கும் தள்ளப்பட்டுள்ளதாயும் தெரிவித்தார்.

இந்த தொழிலாளர் விசாரணை இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் புரியும் தொழிலாளர் வர்க்கத்தினதும் அவ்வாறே இந் நாட்டினதும், முழு உலகத் தொழிலாளர் வர்க்கத்தினதும் மிலேச்ச சேவை நிலைமைகளை வெளியரங்குக்கு கொணர்வதோடு அது தொடர்பான முடிவையும் முன்வைக்கும் எனவும் விலானிபீரிஸ் இறுதியில் குறிப்பிட்டார்.

இந்த பொலிஸ் தாக்குதலை நேரில் கண்ட 'தொழிலாளர் பாதை' (கம்கறு மாவத்த) நிருபர்களில் ஒருவரான வருண அலககோன் விசாரணைக் கமிட்டி முன் தாக்குதலின் தன்மை பற்றி சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ''1994 செப்டம்பர் 5ம் திகதி 'தொழிலாளர் பாதை' நிருபர்களாக நானும் தோழர். உதயபிரேமவும் பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'சமாதான நடைபவனி' ஆரம்பிக்க இருந்த இடத்துக்கு காலை 9-30க்கு சென்றோம். அன்சல் லங்கா, அலிடெக்ஸ், செரமிக் நிறுவனங்களின் தொழிலாளர்கள் இந்த நடைபவனிக்கு தயார் செய்யப்பட்டிருந்தனர்.

''50வீத சம்பள உயர்வு, தொழிற் சங்க அங்கீகாரம், விடுமுறை அதிகரிப்பு போன்ற கோரிக்கைகளின் அடிப்படையில் பியகம சு.வ,வ,த்தின் பல தொழிற்சாலைகளில் போராட்டம் யூ.என்.பி ஆட்சிக் காலத்தில் 1994 ஜூன் 20ம் திகதி ஆரம்பமாகி இருந்தது.

''இந்த போராட்டத்தின் ஆரம்பமும் அவ்வாறே அதன் வழி நடாத்தலும் அன்சல் லங்கா நடவடிக்கைக் குழுவின் தலைமையிலேயே இடம் பெற்றது. இந்த நடவடிக்கை குழுவுக்கான அடிப்படை 1993 செப்டம்பரில் இத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்துக்கு இறங்கி, பொலிஸ் தாக்குதலுக்கு முகம் கொடுத்த சமயத்தில் ஏற்பட்டது.




தோழி. விலானி பீரிஸ்

''இந்நிறுவனத்தில் தினசரி உற்பத்தி இலக்கு 1993ல் 600,000 கையுறைகளாக (கிளவுஸ்) இருந்தது. அதே ஆண்டு இறுதியில் இது 1,200,000 அதிகரிக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்பு போனஸ் வழங்குவதாக கூறி இந்த உற்பத்தி அதிகரிப்பை ஈட்டினர். இருந்த போதிலும் இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு கிடைக்கவில்லை. இதனால் தொழிலாளர்கள் செப்டம்பர் மாதத்தில் வேலைநிறுத்தம் செய்தனர். இந்தப் போராட்டத்தினை முதலாளித்துவ வரம்பினுள் சிறைப்பிடித்து வைக்கும் பொருட்டு யூ, என். பி. அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் கொடுப்பதன் மூலம் கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என்ற நப்பாசையை ஸ்டாலினிச தொழிற் சங்க சம்மேளனம் பரப்பியது. இதில் அதன் தலைவர் சுதசிங்க ஈடுபட்டிருந்தார், அவர் தமது ஐக்கிய தேயிலை, இறப்பர், இந் நாட்டு திரவிய தொழிலாளர் சங்கத்தில் இத் தொழிலாளர்களை சேர்த்துக்கொண்டார். வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் பக்டரி வாசல் அருகே கூடிய வேளையில் 1993 செப்டம்பர் 10ம் திகதி நிர்வாகம் பொலிசாரைக் கொண்டு தொழிலாளர்களைத் துரத்தித் துரத்தி தாக்கியது. சுதசிங்க இத் தொழிலாளர்களை உடனடியாக சேவைக்குத் திரும்புமாறு அறிவித்தார். நிர்வாகிகள் தொழிற் சங்கத்தை அங்கீகரிக்க அடியோடு மறுத்தனர்.

''1994 ஜூன் 20ல் மீண்டும் அன்சல்லங்கா தொழிலாளர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். இதைச் சூழ பியகம சு.வ.வ.த்தின் ஏனைய தொழிலாளர்களும் அணிதிரண்டனர். இத் தடவை சுதசிங்க மட்டுமன்றி இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தில தலைவர் சுபசிங்கவும் பியகம சு. வ, வ தலைகாட்டினார். அவர் பொதுஜன முன்னணியின் முதலீட்டு ஊக்குவிப்பு கொள்கையின் கீழ் தொழிற் சங்கத்தை அங்கீகரித்து கோரிக்கைகளை பெற்றுத் தருவதாக வாயடித்துக் கொண்டார். இங்கு நிறுவப்பட்ட நடவடிக்கை குழுவின் முன்னணி உறுப்பினர்களாக சிறீநாத், நந்தசிறீ, பண்டார, சமந்த. அனில் ஆகியோர் விளங்கினர். இவர்கள் ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் பாசிச ஜே. வி. பி யினதும் தலைவர்கள்... இந்த நடவடிக்கைக் குழு சோசலிச அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் தொழிலாளர்களை அணிதிரட்டுவதற்கு பரம எதிரிகள் இந்த அடிப்படைக் கொள்கைககாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போராடிய வேளையில் இந்த நடவடிக்கைக் குழுவைச் சேர்ந்த பண்டார உள்ளடங்கலான தலைமை தாக்குதல் நடாத்தியதன் மூலம் இது வெளிப்பட்டது.

''ஆகஸ்ட் 18ல் யூ.என்.பி தோற்கடிக்கப்பட்டு பொதுஜன முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்ட போதிலும் பியகம சு.வ.வ தொழிலாளர்களுக்கு எதிரான பொலிசாரின் கைதுகள் அதிகரித்தன. செப்டம்பர் 05 அளவில் 46 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டன்ர். ஸ்டாலினிச தொழிற் சங்கத் தலைவர் சுபசிங்க தொழிற் சங்க உரிமையை நிலைநாட்டுவதற்கு மாறாக அதன் பணி ''முதலீட்டை ஊக்குவிப்பதும்' 'கைத்தொழில் அமைதியையும் உறுதிப்பாட்டையும் ஊர்ஜிதம் செய்வதே,'' என்றார். இந் நிலைமையின் கீழே செப்டம்பர் 5ம் திகதி நடவடிக்கை குழு ஏற்பாடு செய்த ''சமாதான நடைபவனி''யின் மேல் பொலிஸ் தாக்கியது, நாம் பேட்டி கண்ட தொழிலாளர்கள் பின்வருமாறு கூறினர்.

''அன்சல் லங்காவின் ஜயலத் என்ற தொழிலாளி பின்வருமாறு கூறினார்:

''நாம் அன்று காலை கொரியன் ஹவுஸ் (வலயத்தின் கொரிய நிர்வாகிகள் வசிக்கும் இடம்) பக்கம் சென்றோம். காலை 9 மணிக்கு பியகம பொலிஸ் நிலைய அகிபர் நாளகவும் முதலீட்டு சபையின் திஸ்ஸ கல்ஹேனவும் வந்தனர். 'திரண்டு நிற்க வேண்டாம் பொலிசார் தாக்குவார்கள். என மிரட்டினர். முதலீட்டு சபையின் அதிகாரி வங்சபுரவும் பொதுஜன முன்னணி எம்.பி.யுமான பீலிஸ் பெரேராவும் வந்து செரமிக் நிறுவனத்தில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட இரண்டு தொழிலாளர்களை மீண்டும் சேவைக்கு எடுக்கப் போவதில்லை என கூறினர். நாம் எதிர்ப்பு தெரிவித்ததும் 15 நிமிடங்களுக்குள் அங்கிருந்து வெளியேறும்படி கூறினர்'' என்றார்.

நாம் துப்பாக்கிப் பிரயோகம் நடந்த சபுகஸ்கந்த பிரதான வீதிக்கு வந்து 10 நிமிடங்களின் பின்னர் நடவடிக்கை குழுவின் தலைவர்கள் 'நடைபவனி'க்கு ஒழுங்கு செய்து கொண்டிருந்தனர். சில தொழிலாளர்கள் ஊர்வலம் போக வேண்டும் என்றனர். வேறு சிலர் 'நடைபவனி' போகக் கூடாது எனக் கருதினர், தொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்கியவர்களுள் அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின மாஜி, அழைப்பாளரான ஹேரத்தும் ஒருவர். இன்னும் பல்கலைக் கழக மாணவர்கள் எனக் கூற முடியும்.

இந்நிலையத்துக்கு சற்றுத் தொலைவில் குண்டாந்தடி நவீன ஆயுதங்களுடன் சுமார் 40 பொலிசாரைக் கொண்ட ஒரு படையணி தாக்குதலுக்கு உஜார் நிலையில் நின்றது.

இப் பிராந்தியத்தினைச் சேர்ந்த குபரிஹாமி என்ற தொழிலாளி தாக்குதலுக்கு முன்னைய இந் நிலைமையை எமக்குப் பின்வருமாறு விபரித்தார்: ,'அன்று தொழிலாளர்கள் நடை பவனி செல்ல இங்கு வந்தனர். பொலிசார் அதை நிறுத்தும்படி கூறினர். போவதானால் பஸ்களில் போகும்படி கூறினர். இதன் பின்னர் ஒரு வானில் வந்த ஆட்கள் ''துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெறாது போவோம்'' என்றனர். இங்ஙனம் வானில் வந்தவர்கள் யார்?

ஒரு செரமிக் தொழிலாளியிடம் பின்வருமாறு கூறினார்: ''அங்கு நாம் நின்றிருந்த போது அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஆட்கள் வந்து கூட்டம் வைத்தனர். பேசியவர் பின்வருமாறு கூறினார்: ''நடைபவனி செல்ல அனுமதிபெற வேண்டியதில்லை நாம் விக்கிரமாராச்சியில் (கம்பஹா ஆயுள்வேத கல்லூரி) நடைபவனி சென்றது அனுமதியுடன் அல்ல. இப்போது வேறு அரசாங்கம். அவசரகாலச் சட்டம் கிடையாது. ஆதலால் பொலிஸ் தாக்கப்போவதில்லை. முன்னேறுவோம். இப்போது நாம் சும்மா போனால் நாளை 'பிக்கட்' செய்யவும் கிடைக்காது. கேட்டுக்கு வெளியே இறங்கியதும் பிடித்துக் கொள்வர். ஆதலால் முன்னேறிச் செல்வோம். பின்வாங்குவதானால் சண்டைபோட்டுக் கொண்டு சரி பின்வாங்குவோம்.''

இந்த 'சண்டை போட்டுக் கொண்டுசரி பின்வாங்குவது' பற்றிப் பேசி தொழிலாளர்களை நிராயுதபாணியாக்கி தனிமைப்படுத்த நெருக்குவாரம் கொடுத்தோரிடையே பாசிச ஜே. வீ. பி. யுடன் தொடர்பு கொண்ட அ.ப.க.மா.ஒன்றிய அங்கத்தவர்களும் இருந்தனர். தொழிற் சங்க தலைவர் சுபசிங்கவை காணவே கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வொயிஸ் ஒப் அமெரிக்கா', இந்திய-அமெரிக்க பாதுகாப்பு உடன்படிக்கை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சோவியத் யூனியனைக் கலைத்த ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் கொம்பிரதோர் கும்பலும் இந்தியாவின் முதலாளி வர்க்கமும் இன்று ஏகாதிபத்தியவாதிகளின் அரவணைப்பினுள் தவழ்கின்றன. ஏகாதிபத்தியவாதிகளின் கைத்தேங்காயாக மாறியுள்ள இந்த முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு இலங்கையில் 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' நிறுவப்படுவதை எதிர்க்க எதுவித காரணமும் கிடையாது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் "இந்தியாவிடம் இருந்து எந்தவிதமான பிரச்சினையும் எழவில்லை" என ஜனவரி 24ம் திகதிய பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியுள்ளார்.

அத்தோடு இந்தியாவின் நரசிம்மராவ் அரசாங்கம் அமெரிக்க அரசாங்கத்துடன் பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட ஒரு கிழமையினுள்ளேயே பொதுஜன முன்னணி அரசாங்கம் இரணவிலவில் 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' நிலையத்தைத் திரும்பவும் அமைக்க உத்தரவாதம் அளித்துள்ளது. ஜனவரி 13ம் திகதி நரசிம்மராவ் அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சருடன் புதுடில்லியில் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் வில்லியம் பெரி "அது உண்மையிலேயே ஒரு வரலாற்றுத் தன்மை கொண்டது" எனக் குறிப்பிட்டுள்ளார். கடந்த நான்கு தசாப்தங்களாக இத்தகைய ஒரு உடன்படிக்கைக்கு இருந்து வந்த தடைகள் நீங்கி விட்டதாகக் குறிப்பிட்ட வில்லியம் பெரி, இந்தியாவின் யுத்த நடவடிக்கைகளை அமெரிக்க யுத்த நடவடிக்கைகளுடன் இணைத்து நடாத்த இதனால் வாய்ப்புக் கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்டார். இலங்கையில் திணிக்கப்படும் 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் யுத்த முகாம்களதும் யுத்த நடவடிக்கைகளதும் அவசியங்களுக்காகவே என்பது வெளிப்படையாகி உள்ளது.

## பொருளாதார பலவீனம்

பொருளாதார ரீதியில் பலவீனம் அடைந்து போயுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தமது போட்டியாளரான ஐரோப்பிய, ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராகத் தமது ஆதிக்கத்தினை மீண்டும் கட்டி எழுப்பும் பொருட்டு 'சுப்பர்' இராணுவ அதிகாரத்தினைக் கட்டவிழ்த்து விடவும் முகாம்கள் அமைக்கவும் முன்நிற்கின்றனர். இந்நிலைமையிலேயே அமெரிக்க ஆளும் வர்க்கம் பழைய காலனிகளைத் திரும்பக் கைப்பற்றுவதிலும் "மனிதநேய" பிரச்சினைகளின் அடிப்படையில் இராணுவத் தலையீடுகளை உக்கிரமாக்குவதிலும் ஈடுபட்டுள்ளது. "எதிர்வரும் 10 ஆண்டுகளுள் பல நாடுகள் அமெரிக்காவினுள் ஏவுகணைகளை ஏவும் வல்லமையைப் பெற்றுவிடும்" என சமீபத்தில் பென்டகன் வெளியிட்ட அறிக்கை குறிப்பிட்டது. இது அமெரிக்காவின் யுத்த நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் புதிய அறிக்கையாகும்.

ஈராக்குக்கு எதிராக நிரந்தரமான யுத்த ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கடந்த அக்டோபரில் ஹெயிட்டியில் நுழைந்து கொண்டதோடு கியூபாவை ஆக்கிரமிக்கும் மிரட்டல்களிலும் ஈடுபட்டுள்ளனர். இதற்கிடையே அமெரிக்க ஆட்சியாளர்கள் வடகொரியாவுக்கு எதிரான ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள் மூலம் அந்நாட்டின் ஆளும் கும்பலை கைக்குள் போட்டுக் கொண்டு கொரியாவின் வடக்கையும் – தெற்கையும் ஒன்றிணைப்பதன் மூலம் ஜப்பானுக்கு எதிரான தமது முகாமைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். மார்க்கோசின் சர்வாதிகாரத்துக்கு ஆதரவளித்ததன் காரணமாக பொதுஜன வெறுப்புக்கு இலக்கானதால் பிலிப்பைன்சின் சுட்டிக்பே முதலான முகாம்களில் இருந்து வெளியேற அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு நேரிட்டது. ஆனால் சிங்கப்பூர், தாய்லாந்து, டியாகோகாசியாவில் உள்ள தமது யுத்த முகாம்களுக்கு மேலதிகமாக இன்னும் பல முகாம்களை நிறுவும் அவசியம் இந்த ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

மறுபுறத்தில் ஐரோப்பாவின் முக்கிய பொருளாதார சக்தியாக வளர்ச்சி கண்டுள்ள ஜேர்மனியின் முதலாளிகளும் அமெரிக்காவின் முக்கிய பொருளாதாரப் போட்டியாளனான (ஆசியா) ஜப்பானிய முதலாளிகளும் இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் முதற் தடவையாக யுத்த பலத்தைப் பலப்படுத்துவதில் இறங்கியுள்ளனர்.

## யுத்தவெறியும் காலனித்துவமும்

உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் எதிரில் இப்போது மீண்டும் உலகச் சந்தைக்காக புதிய மட்டத்திலான மோதுதல்களிலும் அதன் மூலம் மனிதஇனத்தை மீண்டும் அழிவுமிக்க மக்கட் படுகொலை உலக யுத்தத்திற்குத் தள்ளிவிடவும் ஏகாதிபத்தியம் நின்று கொண்டுள்ளது. இந்நிலைமையினுள் இரணவில 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' யுத்த நிலையத்தைத் திணிப்பது பற்றியும் ஏனைய ஏகாதிபத்தியவாதிகளின் யுத்தப் போட்டிகள் தொடர்பாகவும் எந்தவொரு தொழிலாளியும் ஒடுக்கப்படுவோரும் கண்களை மூடிக்கொண்டு இருக்க முடியாது.

இந்திய-அமெரிக்க உடன்படிக்கை கைச்சாத்தாகு முன்னர் இவற்றின் பொருளாதார, இராணுவ உறவுகளின் நெருக்கத்தின் அவசியத்தையிட்டு அமெரிக்காவின் முன்னணி வர்த்தக நிறுவனங்கள் வெளியிட்ட அறிக்கை பின் வருமாறு குறிப்பிட்டது: "ஐக்கிய அமெரிக்க-இந்திய உறவுகள் பொருளாதாரத் துறையில் வெகு வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றன. இருசாராருக்கும் தெரிவது என்னவெனில் அரசியல் மூலோபாய (யுத்த மூலோபாயம்) பிணைப்பு வளர்ச்சி காணாது போனால் அரசியல் பிணைப்பை கொண்டு செல்ல முடியாது என்பதே." இந்தியாவின் பொருளாதார, அரசியல் இராணுவ நடவடிக்கைகளின் அடிப்படையில் தமது காலனித்துவ பிடியை விஸ்தரிப்பதில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இறங்கியுள்ளனர் என்பதை இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது. இந்நிலைமையினுள் இந்த ஏகாதிபத்திய வாதிகளுக்கு இலங்கையினுள் 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' நிலையத்தை நிறுவும் அவசியம் பெரிதும் உக்கிரம் கண்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக அமெரிக்க அரசாங்கம் தமது தூதுவரைக் கொண்டு வொயிஸ் ஒப் அமெரிக்காவை நிறுவ இடமளிக்காது போனால் இலங்கையின் ஆடை கோட்டாவை வெட்டுவதாகவும் முதலீட்டை நிறுத்துவதாகவும் மிரட்டியது. அமெரிக்க அரசாங்கம் அல்லது அதன் கையாட்களைக் கொண்டு 'சன்டே டைம்ஸ்' பத்திரிகையில் அது பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: "ஒரே மேலாதிக்க வல்லரசு அமெரிக்காவே. அந்நாடு இலங்கையின் பரந்த இறக்குமதிச் சந்தையாகவும் மூலதன ஏற்றுமதியின் முக்கிய மூலகமாகவும் உள்ளது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் ஐக்கிய அமெரிக்கா முதலீடுகளுக்கு பெரிதும் பிரமாண்டமான பணியை ஆற்ற முடியும். இலங்கைக்கு செய்யும் ஐக்கிய அமெரிக்க ஏற்றுமதி விற்பனையால் வாஷிங்டனில் இருந்து உதவியும் தொழில்நுட்ப பரிமாற்றமும் செய்து கொள்ள முடியும். உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பன்னாட்டு அமைப்புக்களுள் அமெரிக்கப் பாத்திரமும் அமெரிக்காவின் சிறிய இருதரப்பு உதவி திட்டத்தினால் இலங்கைக்கு அவசியமான அபிவிருத்தி நிதியை பெறுவது தொடர்பாகவும் தீர்க்கமானது. ஐ.நா.வினுள் அமெரிக்காவின் பாத்திரம் பிரபல்யமானது. கூட்டுச்சேரா விதிமுறை மரணத்தை தழுவியுள்ளது பொருளாதார அவசியங்களால் வெளிநாட்டு விதிமுறை வழிநடாத்தும் குளிர் யுத்தம் முடிவுக்கு வந்துள்ள ஒரு உலகில் இலங்கை தனது வெளிநாட்டுக் கொள்கையை மாற்றிக் கொள்ள நேரிடும்."

சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகளும் சிறப்பாக நவசமசமாஜக் கட்சியும் 'வொயிஸ் ஒப் அமெரிக்காவுக்கு' எதிர்ப்புக் காட்டும் பேரில் கத்தோலிக்க திருச்சபையுடன் கைகோர்த்த ஒரு இயக்கத்தினுள் மக்களை சிறைப்படுத்த முயன்றனர். இவர்கள் வொயிஸ் ஒப் அமெரிக்காவின் ஸ்தாபிதத்தை வெறுமனே இரணவில மக்களின் பிரச்சினையாயும் சூழல் மாசுபடுதல், ஒழுக்க நெறி தொடர்பான பிரச்சினையாயும் திருப்பவும், யுத்த மத்திய நிலையம் என்ற மையப் பிரச்சினையை நழுவவிடவும் முயற்சித்தனர். இறுதியில் இவர்கள் இதனை யூ.என்.பி. அரசாங்கம் செய்து கொண்ட உடன்படிக்கையை அம்பலப்படுத்தக் கோரும் ஒரு பிரச்சினையாகக் கீழறுத்தனர்.

இந்திய முதலாளிகள் அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமை இலங்கை முதலாளித்துவ அரசாங்கம் 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா'வை நிறுவுவதை விரைவுபடுத்த துணை போயுள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. இருநாட்டினதும் பிற்போக்கு முதலாளிகள் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக ஏகாதிபத்தியச் சார்பு எதிர்ப்புரட்சி வேலைத்திட்டங்களில் ஒரே விதத்தில் இறங்கியுள்ளன. இருநாட்டினதும் தொழிலாளர் வர்க்கம் ஒன்றிணைந்து கோடானு கோடி ஒடுக்கப்படும் மக்களுக்கு தலைமை தாங்கி, ஏகாதிபத்தியத்துக்கும் அதன் உள்ளூர் ஏஜன்டுகளான முதலாளிகளுக்கும் எதிராகப் போராட்டத்தில் இறங்கும் மூலோபாயத்தின் அவசியத்தைத் தோற்றுவித்துள்ளது. 1942ல் இந்திய போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சி ஆரம்பித்து நடாத்திய ஒன்றிணைந்த போராட்டம், இன்று புதிய அரசியல் நிலைமையில் புதிய பொறுப்புடன் தொழிலாளர் வர்க்கத்தின் முன் தோன்றியுள்ளது.

## அரசியல் பிரச்சாரம்

'வொயிஸ் ஒப் அமெரிக்கா' உட்பட்ட பிராந்தியத்தின் ஏகாதிபத்திய யுத்த வேலைத்திட்டங்களுக்கு எதிராக சகல இடங்களிலும் அரசியல் பிரச்சாரத்தில் இறங்குமாறு நாம் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை வேண்டுகின்றோம். இப்போராட்டம் பொலிஸ்-இராணுவ அடக்குமுறைக்கும், குண்டர் படைகளுக்கும், இனவாத யுத்தத்துக்கும், வேலை நீக்கங்களுக்கும், வாழ்க்கைத் தரத்தினை நாசமாக்குவதற்கும், உதவிமானிய ஒழிப்புக்களுக்கும் எதிரான போராட்டத்துடன் இணைந்து வளர்ச்சிபெற வேண்டும்.

எமது போராட்டத்தின் இலக்கு, ஏகாதிபத்தியத்தினை தூக்கி வீசும் உலக சோசலிசப் புரட்சியின் முன்நோக்குடன், இலங்கை-தமிழ் ஈழம் சோசலிச குடியரசுக்கும், அகில இந்திய துணைக் கண்டத்திலும் சோசலிச குடியரசு ஒன்றியத்துக்கும் போராடுவதே. உலகம் பூராவும் தொழிலாளர் வர்க்கத்தை அனைத்துலக சோசலிசத்துக்காக அணிதிரட்டும் போராட்டத்தின் ஒரு பாகமாக இப்போராட்டத்தினை இலங்கையினுள் வழிநடாத்துவது நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச் 19 தொழிலாளர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் கதையளப்புக்களின் மூலம் கடந்த ஆண்டு பொதுசன முன்னணி அரசாங்கம் ஆட்சிப் பீடம் ஏறியது.

கடந்த ஆறு மாதங்களில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கதையளப்பு வேலைத்திட்டம் என்ன? தொழிலாளர் — ஒடுக்கப்பட்டோரை பொறுத்தமட்டில்: பொலிஸ்—இராணுவ துப்பாக்கிச் சூடுகள்' கொலைகள் வரையும் அரசாங்க அடக்குமுறை தீவிரம் கண்டது. குண்டர்கள் கட்டவிழ்க்கப்பட்டனர், தொழிலாளரை அடக்க விசேட பொலிஸ் பிரிவு நிறுவப்பட்டது. விலைவாசி உயர்ந்ததோடு வாழ்க்கைத் தரம் —தொழில் நலன் புரிச் சேவைகளுக்கு வேட்டு வைக்கப்பட்டது. ஏகாதிபத்தியம் இலங்கை முதலாளிகளை பொறுத்தமட்டில் தொழிலாளர், ஒடுக்கப்பட்ட மக்கள் அடக்கி தண்டிக்கப்பட்டனர். இத் தாக்குதல்களை தவிர முதலீடுகளுக்கும் இலாப கொள்ளையடிப்புக்கும் புதிய நிலைமைகள் சிருஷ்டிக்கப்பட்டன. அமெரிக்க யுத்த தொடர்பு நிலையமாக பயன்படவல்ல ''அமெரிக்காவின் குரல்'' (வொயிஸ் ஒப் அமெரிக்கா) கட்டி எழுப்ப இடமளிக்கப்பட்டது.

ஜனவரி 6ம் திகதி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கொள்கைகளை சமர்ப்பித்து, எதிர்காலத்தில் தொழிலாளர் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தாக்குதல் தொடுக்க ஏகாதிபத்தியம் விடுத்துள்ள கட்டளைகளுக்கு இணங்கி நடக்க அரசாங்கம் தயாரித்துள்ள தாக்குதல் தொடர்களை அறிவித்தார்.

இந் நிலைமையிலேயே இவ்வாரம் வங்கி, காப்புறுதிக் கூட்டுத்தாபனம், மின்சார சபை, டெலிகொம், நிறுவனங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் 'தனியார் மயமாக்கல்' மிரட்டலுக்கு எதிராக தமது எதிர்ப்பினை காட்டும் பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளனர். பெலவத்த சீனிக் கூட்டுத்தாபனத் தொழிலாளர் அரைகுறை தொழிலாளர் கடந்த பத்து நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர், தனியார்மயமாக்கப்பட்டு வெளிநாட்டு முதலாளிகளிடம் ஒப்படைக்கப்பட்ட தொழிற்சாலைக்குள் அவர்களை நுழையவிடாது சுந்தளாய் சீனிக் கூட்டுத்தாபனத் தொழிலாளர் உள்ளமர்ந்துகொண்டு போராடுகின்றனர். பல தனியார் முதலாளித்துவ கம்பனிகளைச் சேர்ந்த தொழிலாளர். வேலைநிறுத்தங்களில் குதித்துள்ளதோடு கதவடைப்பு மிரட்டலுக்கும் முகம் கொடுத்துள்ளனர். கட்டுநாயக்கா கொரியா – சிலோன் கம்பனியில் சம்பள உயர்வுக்காக தொடுக்கப்பட்ட பிரச்சாரத்தினை தொடர்ந்து 27 தொழிலாளரை நிர்வாகம் வேட்டையாடியது. இதற்கு எதிராக தொழிலாளர் பிரச்சாரம் அபிவிருத்தி அடைவது கண்டு பொலிசாரைக் கொண்டு துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தியது. இதைத் தொடர்ந்து வேறுபல தொழிலாளரை வேலை நீக்கியுள்ளனர். கட்டுநாயக்க, பியகம போன்ற சுதந்திர வர்த்தக வலயங்களில் வேலைநீக்கங்கள், வேலைதுரிதப்படுத்தல், அடக்குமுறை என்பன பரந்துபட்டுவருகின்றன.

அரசாங்கமும் முதலாளிகளும் தோட்டத் தொழிலாளிகளுக்கு எதிரான கொடிய தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. தோட்டங்களை நீண்ட கால குத்தகைக்கு விடுவது என்ற பெயரில் அரசாங்கத்தின தனியார்மய தயாரிப்பு வெளிப்பட்டுள்ளது. இதற்கு எதிராகத் தொழிலாளர் எதிர்ப்பு வளரும் என்ற அச்சத்தினை அரசாங்கம் கொண்டுள்ளது. இந் நிலையில் தோட்டத் தொழிலாளருக்கு எதிராக கிராமப்புற வறிய மக்களை இனவாதரீதியில் தூண்டிவிடும் நோக்கில் தோட்டநிலங்களையும் அதனை சார்ந்த இடங்களையும் கைப்பற்றும் அபைப்புரீதியிலான இயக்கத்தை தொடுத்துள்ளது.

தமது நீண்ட காலக் கோரிக்கைகளை முன்வைத்து தாதிமார் ''சட்டப்படி வேலைசெய்யும்' 'எதிர்ப்பு இயக்கத்தை தொடுத்ததுடன் அதற்கு எதிராக பொதுஜன முன்னணி அரசாங்கம் மிக மோசமான அடக்கு முறை இயக்கத்தை கட்டவிழ்த்துள்ளது.

## முன்னோக்கு, தலைமை பற்றிய பிரச்சனை

தமது உரிமைகளுக்காக போராட்டங்களில் ஈடுபட்டுள்ள இடங்களிலும், [illegible] மிரட்டலுக்கு இலக்காகியுள்ள இடங்களிலும் தொழிலாளர் ஒரு முக்கிய பிரச்சனையை எதிர்கொள்கின்றனர் — அதாவது எசமானர்களும் பொதுஜன முன்னணி அரசாங்கமும், ஏகாதிபத்தியமும் செயற்படுத்தும் தாக்குதல்களுக்கு எதிராக போராடவல்ல முன்நோக்கும் தலைமையும் அற்ற பிரச்சனையை எதிர்கொண்டுள்ளனர்.

சகல தொழிற் சங்கங்களுமே ஒரு முன்னோக்கை முன்வைக்க முடியாத அளவுக்கு வங்குரோத்து அடைந்துள்ளன. அவை யாவும் எசமானர்களினதும் அரசாங்கத்தினதும் தயாரிப்புக்களுக்கு துணைபோகும் பிற்போக்கு இயக்கங்களாக இன்று மாறியுள்ளன. சமசமாஜ, கம்யூனிச இ.தொ.கா. மலையசமக்கள் முன்னணி உட்பட்ட சகல அமைப்புக்களும் நேரடியாக பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பங்காளராக உள்ளன. தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக தாக்குதல் தொடுக்கும் எதிர்ப் புரட்சிகர வேலைத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளன. நவசமசமாஜ கட்சி ஒரு புறத்தில் அரசாங்கத்தை சார்ந்து நின்று கோரிக்கைகளைப் பெறலாம் என்ற நப்பாசையை தூண்டி தொழிலாளர் கண்ணில் மண் தூவுகிறது. மறுபுறத்தில் பாசிச ஜே.வீ.பி போன்ற அமைப்புக்களுடன் சேர்ந்து பிற்போக்கு பொறிக்கிடங்குகளை தோண்டுகிறது.

மாக அது கூட்டுத்தாபனமாக்கப்பட்டது. அப்போது இந்த தொழிற்சங்க முன்னணி பிரச்சாரம் எனக் கூறிக்கொண்டு ரெலிகொம் அமைப்பதற்கான நிலைமைகளைச் சிருஷ்டித்தன.

தொழிற் சங்கவாதிகளிடமிருந்து ஏகாதிபத்தியவாதிகளும் முதலாளித்துவ தொழில்அதிபர்களும், அரசாங்கங்களும் இன்று எதிர்பார்ப்பது என்ன? மெச்சிக்கோ தொழிற்சங்கவாதிகளின் செயற்பாடு பற்றி சமீபத்தில்

போராட்டத்தில் தொழிலாளர் வர்க்கம், ஒடுக்கப்படும் மக்களுக்கும் இளைஞர்களுக்கும் தலைமை தாங்க வேண்டும. அதற்கு முதலாளி.வர்க்கத்திலிருந்து அரசியல்ரீதியில் சுயாதீனம் ஆக வேண்டும். சமசமாஜ—கம்யூனிச — நவசமசமாஜ — இ.தொ.கா துரோகிகளதும் தொழிற் சங்க அதிகாரிகளின் எதிர்ப் புரட்சி ஏகாதிபத்திய சார்பு நடைமுறைகளுக்கு எதிராகவும் தொழிலாளர் வர்க்கம் கிளர்ச்சிகரமான முறையில்



இலங்கை மின்சாரசபை, டெலிகொம், அரசவங்கிகள் உட்பட்ட நிறுவனங்களை தனியார்மயமாக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் திட்டத்துக்கு எதிராக பெப்ரவரி 1ம் திகதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட டெலிகொம் ஊழியர்கள்

கடந்தவாரம் வங்கி, காப்புறுதி, டெலிகொம், மின்சாரசபை ஊழியர்கள் மறியல் போராட்டம் நடத்திய வேளையில் டெலிகொம் தொழிற்சங்க ஐக்கிய முன்னணி வெளியிட்ட துண்டுப் பிரசுரம் குறிப்பிடுவதை சற்றுப்பாருங்கள்;

''உலகவங்கி ஆலோசனைகளுக்கு செவிசாய்த்து சந்தைப் பொருளாதாரம் என்ற இருளான பாகத்தை மட்டும் தோளிலேற்றி கடந்த 17 ஆண்டுகளாக நாட்டின் தேசிய வளங்களை சுருட்டிச் செல்ல இடமளித்த பழைய அரசாங்கத்தின கையாட்கள் சிலர் இன்னமும் தற்போதைய அரசாங்கத்தின் கீழும் முக்கிய அதே பதவிகளில் இருந்து இத்தகைய தேச துரோக, மக்கள் துரோக நடவடிக்கைகளினை செயற்படுத்த முனைந்து வருவதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.''

பொதுஜன முன்னணி அரசாங்கத்தை மூடிமறைத்து சப்புக்கொட்டும் ஊழியரது கண்ணில் மண் தூவிவிடும் பொருட்டு தொழிற்சங்க ஐக்கிய முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கை இத்தகையதே. இந்த தொழிற்சங்க ஐக்கிய முன்னணி வேலைத்திட்டம் எத்தகையது? இச் சகல அரச அமைப்புக்களது தொழிற்சங்கங்களும் ஐக்கியப்பட்டு முன்னணி நிறுவி பிரச்சாரம் நடத்துவது என்பதே. சில சமயம் பிழைத்துப் போனால்! அதையிட்டு மூச்சும் காட்டமாட்டார்கள். தொலைத்தொடர்பு திணைக்களத்தை தனியார்மயமாக்கும் நடவடிக்கையின் ஆரம்ப

அமெரிக்க வங்கியாளர்களின் சஞ்சிகையான ''வோல் ஸ்ரீட் ஜேர்னல்'' குறிப்பிட்டவை இலங்கை உட்பட்ட சகல நாடுகளுக்கும் பொருந்தும்: அது இதுதான

'தொழிலாளர்களின் அபிலாசைகளைப் பிரதிநிதித்துவம் செய்வதாக தொழிலாளர் நினைத்துக் கொள்ளச் செய்யும் விதத்தில் தொழிற் சங்கங்கள் முடிந்த மட்டும் உரத்த குரலில் கத்த இடமளிப்பதோடு பின்னர் அரசாங்கம் அவற்றுக்குச் சொல்வதை செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது''. பொதுஜன முன்னணி அரசாங்கம் செய்து கொண்டுள்ள ''முத்தரப்பு உடன்படிக்கை'' யினுள் இத் தொழிற்சங்கங்கள் ஏற்கனவே சேர்ந்து கொண்டுள்ளன.

தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் எந்தவொரு அடிப்படைப் பிரச்சினைக்கும் வேலைத்தலத்தின் எல்லைச் சுவர்களுள் அல்லது 'தேசிய' எல்லைகளுக்குள் தீர்வுகாண முடியாது. ஏகாதிபத்தியத்தினைத் தூக்கி வீசி அனைத்துலக சோசலிசத்தினை நிர்மாணிக்க உலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் ஒன்றிணைந்து செய்யும் போராட்டத்தின் ஒரு பாகமாக மட்டுமே ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்கள், உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், பொதுஜன முன்னணி, இலங்கை முதலாளிகளுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்க முடியும்.

சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையிலான முன்நோக்கிச் செல்ல வேண்டும். முதலாளிவர்க்க ஆட்சியை தூக்கிவீசி, இலங்கை தமிழ் ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை ஆட்சியில் அமர்த்த வேண்டும். இம் முன்நோக்கிற்குப் போராட தொழிலாளர் வர்க்கத்துக்குப் புதிய புரட்சிகர அனைத்துலக மார்க்சிசக் கட்சி அவசியம். அக் கட்சி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. 1995 மார்ச் 19ம் திகதி நடைபெறும் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் பேராளர் மகாநாட்டில் கலந்து கொண்டு அந்த புரட்சிக் கட்சியை கட்டியெழுப்ப தோள்கொடுங்கள்.

---

## ஜேர்மன் ட்ரொட்ஸ்கிஸ்டு..

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் குற்றச் சாட்டுக்களை வாபஸ் பெறாமல் அவர்கள் இந்த பொய் வழக்கை வீட்டைச் சோதனையிட கட்டளையிடுவதன் மூலம் உக்கிரமாக்கினர். சிம்மர்மானுக்கும் BSA க்கும் எதிரான நடவடிக்கை BSA ஐயும் அதன் அங்கத்தவர், ஆதரவாளர்களையும் குழப்பியடிப்பதற்கான ஒரு அரசியல் நடவடிக்கை என்பது தெளிவு. இது பொலிசாரினதும் நீதித் துறையினதும் திட்டமிட்ட நடவடிக்கை. மிகவும் அடிப்படையான ஜனநாயக உரிமைகளை மீறுவதாகும்.

கொழும்பு 10. 1ஆவது மா[illegible] ஒழுங்கை, இலக்கம் 30ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புரவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org